PUBLIC LIBRARY
JAFFNA
05 APR 2012

ஹலோ
Something Special
பல்சுவை விளம்பர இலவச ஏடு - 01.04.2012


Alpha Aroma
Start with Natural
Office, Reception Table Decoration
Natural Special Occasion Boquets
Natural Wedding Boquets
Natural Birthday Boquets
& All Kinds of Natural Flower Arrangements
Bavani
0775 750028, 0777 885018



# அதிகரிக்கும் டொலரும் வீழ்ச்சியுறும் நாணயமும்

**அண்மைக்காலமாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது தொடர்து வீழ்ச்சி கண்டுவருவது பொருளாதார ரீதியில் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தும் என பலதரப்பினரும் அச்சம் தெரிவித்து வருகின்றனர். பொதுவாக இந்த நாணயப்பெறுமதி வீழ்ச்சியானது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துறையில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன் பொருட்கள் அனைத்தினதும் விலைவாசி உயர்வென்பது தவிர்க்க முடியாததென்றாகி விடும் எனக் கூறப்படுகிறது.**

கடந்த மாதமளவில் அமெரிக்க டொலர் ஒன்றிற்கான இலங்கை நாணயத்தின் பெறுமதியானது 111 ரூபாவாக இருந்த நிலையில் இருந்து, இம்மாதத்தில் மேலும் மோசமான சரிவைச் சந்தித்துள்ளது. இந்த நாணயப் பெறுமதி வீழ்ச்சியை தடுக்க அரசு எடுத்த முயற்சிகள் பயனளிக்காத நிலையில் கடந்த மாதம் 19ம் திகதி அது 130.60 சதம். என்ற நிலையை எட்டியது. இதனைத்தொடர்ந்து,ரூபாயின் மதிப்பு ஒருதளம்பல் நிலையிலேயே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இதனைத்தடுக்க அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் அதனால் அது சாத்தியமற்றதொன்றாகவே உணரப்படுகின்றது. இதேவேளை எரிபொருள் உட்பட பல பொருட்களின் விலையேற்றத்தை அடுத்து, சிகரட்,மதுபானம் என பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்ந்து வருவதுடன் பணவீக்கமானது 5.5 வீதமாக கடந்த வாரத்தில் உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில்,எரிபொருள் உட்பட பல்வேறு பொருட்கள் விலையேற்றமானது அதிகரிக்க,இங்கும் அவற்றின் பெறுமதி, டொலரின் பெறுமதிக்கேற்ப உயர்த்த வேண்டிய நிலையில் அரசு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளமையானது. சகல தரப்பினரினதும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் சூழலை ஏற்படுத்தும் என அச்சப்படுகின்றது.

## கருத்தோவியம் - சுந்தர்




சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிரித்திரன் சுந்தர் அவர்கள் தனது "மகுடி" பதில்களில் கூறிய கருத்து இது... காலம் கடந்தும் இன்னமும் எப்படி பொருந்துகிறது பாருங்கள்...

ஒரு இளைஞன் தன்னைத் தான் உருவாக்கிக் கொள்வதற்கான விதிகள்: மிகக்குறைவாக பேசவோண்டும்.அதிகமாக கவனித்து கேட்கவேண்டும். நிறையப் பேர்களின் மத்தியில் இருக்கும்போது குறைவாகவே தனது கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டும். தனது அபிப்பிராயங்களைக் குறைத்து மற்றவர்களுடையதற்கு அதிக மதிப்பளிக்க வேண்டும்.

–சார்.டபிள்யு.டெம்பிள் –

## வைரவரிகள்

தினக்கு வரும் துயரங்களை இந்த உலகம் முழுவதும் பகிர்ந்து தாங்கிக்கொள்ள வேண்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் மற்றவர்களின் துயரங் களைத் தாங்கிக் கொள்வதற்குக் தயாராக இருப்பதில்லை.

–ஏ.பாய்ன்ஸ்லாட் –

## பத்திரிகை சொன்னதும்...

ஐநா மனிதஉரிமை சபையின் கிளை அலுவலகம் ஒன்றை நிறுவ மனித உரிமைகள் அமைப்பு தீர்மானித்துள்ளதாக உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முள்ளிவாய்காலில் தலைக்குமேலாகப் போன வெள்ளத்தை தடுக்கமுடியாது நித்திரை கொண்டுவிட்டு இப்ப அணைகட்டப் போகினமாம்...

தந்தை செல்வாவின் நினைவாலயத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து அவரது பிறந்ததின நிகழ்வை உனர்வுபூவமாக அனுஸ்ரித்தார்களாம் அதுவும் செய்திதான்...

இத்தகய உணர்வுகளை ஒன்றாகஅனுஸ்டித்தார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம். தந்தை செல்வாவின் ஆத்மா இதனை எவ்வாறு புரிந்துகொண்டிருக்கும். கதையோடு கதையாக அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியை பார்வையிட வந்த ரசிகர்கள் சிலர் தந்தையின் நினைவுச்சமாதியில் ஏறிநின்று ரசித்ததை இணையத்தில் பார்த்தபோது நெஞ்சு வலித்தது. இதுபற்றியாரும் எதுவும் உணர்வுபூர்வமாக வாய்திறக்காமல் இருந்துவிட்டார்கள்...

இன்னும் ஒரு வருடத்துக்குள் நாடாளுமண்றம் கலைக்கப்படுமென்று ஐக்கியதேசியக்கட்சி எதிர்வு கூறியுள்ளதாகவும் ஒரு செய்தி... அப்ப இனி மெல்லமெல்ல தேர்தல் வியாதி பரவும் என்று முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்கள் என்றுதான் நினைக்க முடிகிறது.




மதுபானங்களின் விலை ஏறின என்றும் ஒரு செய்தி. குடிமக்ககளுக்கு இடிவந்தது போல வந்துள்ளது. இந்தக் கவலையால் இன்னும் அதிகம் குடிக்கப்போகிறார்கள் அவ்வளவுதான்.

கிழக்கின் அபிவிருத்திக்கு ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாம்? ஒதுக்கீடுகள் எல்லாம் கடைசியாக எங்கேபோய் ஒதுங்கிக் கிடக்குது என்பது தான் மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி...

## பரஞ்சோதி சொன்னதும்...

கிருபா லேனர்ஸ் (L)
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
பெண்களுக்கு நவீன
காரில் பயிற்சி வழங்கப்படும்.
021 492 3200 (கவிதா)
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
தாம் விரும்பிய நேரங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.
சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலே பெற்றுக்கொள்ளலாம்.
தலைமைக் காரியாலயம்: 226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P 021 222 4353, 07777 22 5292
www.kirubalearners.com
கிளைகள் :
சாவகச்சேரி. 021 492 3202
நெல்லியடி 021 300 6550
சுன்னாகம் 021 224 2022, 0714546956, 0777225292
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515



# அழிந்து வரும் வண்ணத்துப்பூச்சி இனம்





பூவாக பறந்து போகும்.... பட்டாம் பூச்சியைக் கண்டு ரசிக்காதவர்கள் இங்கே இருக்கமுடியாது. அவை பறப்பது. நாம் ரசிப்பதற்காக அல்ல, நம்முடைய எதிர்காலத் தேவைக்கான உணவு உற்பத்திக்கு உதவி எதிர்காலத் தேவைக்கான உணவு உற்பத்திக்கு உதவி செய்யத்தான். ஆனால், அத்தகைய வண்ணத்துப்பூச்சிகள், அழிவின் விளிம்பை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன என்றால்... அதிர்ச்சியாகத்தானே இருக்கும். அதைவிட அதிர்ச்சி, அவற்றை அந்த நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருப்பதும் நாம்தான்!

ரங்கோலி போல நேர்த்தியான வடிவங்களில் விதவிதமான கோலங்களை தன்னுடலில் சுமந்தபடி வட்டமடிக்கும் வண்ணத்துப் பூச்சிகள் தேனீக்களைப் போல மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சி ரகங்களில் ஒன்று. ஆனால், இப்பூச்சி இனத்துக்கு சமீபகாலமாக பெரும் அழிவு நேர்ந்து கொண்டிருக்கிறது, என்று கவலையோடு கூறுகிறார்கள் பூச்சியியலாளர்கள்.

உத்தரபிரதேச மாநிலம், பரேலி நகரில் 'தட்பவெப்ப மாறுபாடுகளின் நிலையில், கால்நடைகளின் வளர்ச்சி' என்ற தலைப்பில் சமீபத்தில் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இதில் பேசிய ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநர் டாக்டர் எம்.பி. யாதவ், வண்ணத்துப்பூச்சிகளின் அழிவு பற்றி, அபாயமணி அடித்திருக்கிறார்.

“சமீபத்தில் நடந்த ஆய்வுகள் மூலம் வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கையில் பெரிய சரிவு ஏற்பட்டிருக்கிறது, என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏதோ ஒரு பூச்சி இனம் அழிந்து வருகிறது. என்று இதை சாதாரணமாக விட்டுவிட முடியாது. அதன் மூலம் நாட்டில் 20% பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, விவசாயத்தில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. புதிது புதிதாக நாம் பயன்படுத்தும் உரங்களும், பூச்சிக்கொல்லிகளும் தான் வண்ணத்துப் பூச்சியின் அழிவுக்கு முக்கிய காரணங்கள்” என வருத்தம் பொங்கத் தன்னுடையக் கருத்தைப் பதிவு செய்திருக்கிறார் எம்.பி. யாதவ்.

இதை ஆமோதிக்கும் விஞ்ஞானிகளில் ஒருவர்.. வண்ணத்துப்பூச்சிகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வரும் பேராசிரியர் ஹர்ஜிந்தர் சிங் ரோஸ். பஞ்சாபி பல்கலைக்கழகத்தின் முன்னாள் உயிரியல் துறையின் தலைவரான இந்த ரோஸ், தற்போது சண்டிகர்ஷஹீத் உத்தம் சிங் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர்.

“வண்ணத்துப் பூச்சிகளின் உதவியால் மகரந்தச் சேர்க்கை செய்யும் பூக்கள் மற்றும் பழங்களின் உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியை வைத்துத்தான், இதுவரை வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை பற்றி நம் நாட்டில் எந்தக் கணக்கெடுப்பும் நடைபெறாததால், அவற்றின் அழிவு குறித்து புள்ளிவிவரமாகக் கூற முடியாது.

சில குறிப்பிட்ட செடிகளின் பூக்களில்தான் வண்ணத்துப்பூச்சிகள் முட்டைகளை இடும். இந்தச் செடிகளின் அழிவும் பூச்சிகளின் அழிவுக்கு ஒரு காரணம். அதோடு புவி வெப்பமயமாதலும் ஒரு காரணமாக இருக்கிறது” என்று அடுக்கும் ரோஸ்,

“வனவிலங்கு பாதுகாப்புச் சட்டப்படி வண்ணத்துப்பூச்சியும் பாதுகாக்கப்பட்ட இனங்களில் ஒன்று. இதைப் பிடித்து அழிப்பதும், விற்பதும் சட்டப்படி தண்டைக்குரியது. இந்தச் சட்டத்தில் சிறுத்தை புலி, யானை போன்ற பெரிய விலங்குகளைப் பற்றி மட்டுமேதான் நாம் சிந்திக்கிறோமே தவிர, இப்படிப்பட்ட பூச்சிகளைக் கண்டுகொள்ளவதேயில்லை.

அதனால்தான் இங்கிருந்து, வண்ணத்துப்பூச்சி உட்பட பல வகையான பூச்சிகளை வெளிநாடுகளுக்கு கடத்தும் அவலமும் இங்கு நடக்கிறது. இமயமலைப் பகுதியில் காணப்படும் 'அப்போலலோ' வகை வண்ணத்துப்பூச்சி ஒன்று 25,000 ரூபாய் வரை வெளிநாடுகளில் விற்கப்படுகின்றன. இதன் இறக்கைகளை வெட்டி அழகுப் பொருளாக ஜப்பானியர்கள் பயன்படுத்துகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் 14 ஆயிரம் வண்ணத்துப்பூச்சிகளுடன் இமாச்சல பிரதேசத்தில் இரு மங்கோலியர்கள் பிடிபட்டனர்” என்ற ரோஸ் நிறைவாக,

“பயிர்களின் வளர்ச்சிக்கு உதவும் வண்ணத்துப்பூச்சிகளுக்கு இணையாக ஐந்நூறுக்கும் மேற்பட்ட பூச்சி வகைகள் இந்தியாவில் உள்ளன. இவற்றைப் பற்றி ஆய்வு செய்ய நம் மத்திய அரசு நிதி உதவியும் செய்கிறது. ஆனால், ஆய்வுகள் மேற்கொள்ள உயிரியல் ஆய்வாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள்தான் போதுமான அளவில் இல்லை.

வெளிநாட்டவர்கள் இங்கிருந்து ரகசியமாக இந்த வகையான பூச்சிகளைப் பிடித்துச் சென்று பல்வேறு வகை ஆய்வுகள் செய்து, அவர்கள் நாட்டில் வெளியிடுகிறார்கள். அவற்றை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால், நம் நாட்டில் அவற்றை கண்டுகொள்வதுகூட கிடையாது. நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றால், வண்ணத்துப்பூச்சிகள் மாதிரியான பூச்சிகளையும் பாதுகாக்க வேண்டியது அவசயம்” என்றார் முத்தாய்ப்பாக.●

- நன்றி: பசுமை



**யாழ்நகரில் பிரபல்யமான சாரதிப் பயிற்சி நிலையங்களில் ஒன்றான 'கிருபா லேணர்ஸ்' அதிபர் அவர்கள் பயிற்சி நெறிபற்றியும் அதுகுறித்த விபரங்கள் தொடர்பாகவும் தெரிவித்த விடயங்கள் வருமாறு.**

# அனைவருக்கும் சாரதிப்பயிற்சி இன்று அவசியமாகிவிட்டது.!

“இன்றைய நவீன அறிவியல் யுகத்தின் மாற்றங்கள் வேகமானவை.. அதுமட்டுமல்லாது மனித வாழ்வின் அன்றாட செயல்பாடுகளும், தேவைகளும் நாம் விரும்பியோ, விரும்பாமலோ அறிவியல் சாதனங்களின் பயன்பாட்டுடன் இரண்டறக் கலந்ததாகவே ஆகிவிட்டது. குறிப்பாக சராசரி மனிதனின் வாழ்வியக்கம் என்பது வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி என விரிந்து வாகனப் பயன்பாடு, கணனிப்பயன்பாடு என இணையத்தளம் வரை சிகரம் தொட்டுநிற்கின்றது”.

“டிஜிற்றல் தொழில் நுட்பமானது நமது வாழ்வை வேகமயமாக மட்டுமல்லாது விவேக மயமாகவும் மாற்றிவிட்டது. வேகம் உலகத்தை சுருங்க வைத்துவிட்டது என்று கூறுவது இன்றைய போக்குவரத்து செயற்பாட்டில் அறிவியல் தொழில்நுட்பம் ஏற்படுத்திய மாற்றமேயாகும்”.

இந்த சூழலில் வாகனங்களை செலுத்துவதிலும் அதனை பயன்படுத்துவதிலும் சிறுவர் முதல் பெரியோர் வரை ஆர்வம் செலுத்த வேண்டிய அவசியம் காலத்தின் கட்டாயம் ஆகிவிட்டது.”

“ஒருவரிடம் சொந்தமாக வாகனம் இருக்கிறதோ இல்லையோ அவர் குறைந்த பட்சம் இலகுரக மோட்டார் வாகன சாரதியப் பயிற்சி பெற்று, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் முக்கியமாகும். அது எத்தகைய அவசியம் என்பதை அவசர சமயங்களில் தான் புரிந்து கொள்ள முடியும்.

இன்று சாரதிப் பயிற்சி பெறுவது என்பது ஆர்வமும் அக்கறையும் உள்ள எவருக்கும் கடினமான ஒன்றல்ல. வெளிநாடுகளில் இத்தகைய பயிற்சிகளுக்கு என்று பல்வேறு நவீன சாதனங்களும் கற்பித்தல் முறைகளும் பயன்படுத்தப்படுவது உண்மைதான். ஆனாலும் நம்நாட்டின் போக்குவரத்து முறை, வீதி அமைப்பு, சட்டவிதிமுறைகள் மற்றும் பயன்படுத்தப்படும் வாகனங்களின் தன்மைகள் - தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு அமையவே நாம் பயிற்சி நெறிகளை வகுத்து நடைமுறைப்படுத்துகிறோம். இப்பயிற்சி நெறிகளின் தரம் உத்தரவாதமானது என்பது உறுதிப்படுத்தப்பட்டவிடயமாகும்.”

“பொதுவாக சாரதிப் பயிற்சி பெறவிரும்புவோரின் அடிப்படைத்தகைமைகள், பொதுவான கல்வியறிவு, ஆரோக்கியமான உடல்நிலை, தெளிவான பார்வை, நிதானப்போக்கு, மது மற்றும் போதைப் பொருட்களைப் பயன்படுத்தாத தன்மை, போன்றவையே யாகும். இவற்றை விட சட்டம் ஒழுங்குக் கட்டுப்பாட்டை மீறாத பண்பாடும் அவசியமானதாகும். இவையாவும் ஒருவர் ஒரு சிறந்த சாரதியாக சுயவாழ்விலும், தொழில்சார்துறையிலும் வெற்றிபெற மிக மிக அவசியமாகும்.”

“வேகமாக - குறுகிய காலத்தில் - சில அத்தியாவசிய தேவைகளுக்குகேற்ப பயிற்சி வழங்குதல் என்பது சாத்தியமற்றது என கூறமுடியாது.ஆனால் அத்தகைய பயிற்சி என்பது பயிற்சி பெறுபவருடைய அறிவாற்றல், தன்னம்பிக்கை மற்றும் “ஆளுமைத்திறன் என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. எனினும் முறையான பயிற்சி என்பது கற்பிப்பவரின் திறனாற்றலில் மட்டும் தங்கியிருப்பதில்லை கற்பவரின் பயிற்சி அனுபவத்திலும் தங்கியுள்ளது. எனவே குறிப்பிட்ட கால வரையறையுடன்கூடிய பயிற்சி அனுபவமே ஒருவரை திறன்மிகு சாரதியாக்கும்.”



கிருபா லேணர்ஸ் சாரதிப் பயிற்சிக் நிலைய அலுவலகத்தை யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் திறந்து வைக்கும் காட்சி

நாம் தகுதியும், அநுபவ நேர்த்தியும், ஆளுமைத்திறனும் தொழில்நுட்ப அறிவும் கொண்ட பயிற்சி ஆசிரியர்கள் மூலம் மும்மொழிகளிலும் பயிற்சிபெறுவோர்க்கு கற்பித்தலை மேற்கொள்ளுகிறோம். பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களும் நவீனத் தன்மை கொண்ட தொழில் நுட்பம் கொண்டவை. தரச்சான்றிதழ்களையும் கொண்டவை. முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டன. எனவே எம்மிடம் பயிற்சி பெறுவோர் 'சாரதியம்' தொடர்பான முழமையான தகைமை கொண்டவர்களாக பயிற்சி நிறைவில் வெளிவருகிறார்கள். அதுவே எமது நிறுவனத்தின் சேவைத்திறக்குச் சான்று.



கிருபாலேணர்ஸ் அதிபர்
திரு.கிருபாகரன்

இதேவேளை ஒரு விடயத்தை முக்கியமாக சொல்லியேயாகவேண்டும். அதாவது, சிலர் தமது அவசர தேவைகளுக்காக சில தவறான நபர்களின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளின் பேரில் கொழும்பிலும், வெளியிடங்களிலுமுள்ள முகவர்களினூடாக பெருந்தொகை பணத்தை செலவிட்டு குறுகிய காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள விழைகின்றனர். இத்தகைய குறுக்கு வழிகளைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் போலியானவை, சட்டவிரோதமானவை அத்துடன் சிக்கல்களில் மாட்டிவிடக்கூடியவை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய வழிமுறைகளாக கையாண்டு நெருக்கடி வரும்போது ஆபத்துக்களில் சிக்கி சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாகாது நம் மண்ணிலேயே பல தரமான சாரதிப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் இணைந்து முறையான பயிற்சியை பெற்று உத்தரவாதமிக்க அனுமதிப் பத்திரங்களை பெறுவதே எல்லாவகையிலும் நல்லது. பாதுகாப்பானது. என்று அவர் தெரிவித்தார்.



## சிந்தனைப் பொறிகள்

எல்லாக் கலைகளுக்கும் நீண்டகால அனுபவம் தேவை. ஆனால் மற்றவர்களை அன்போடு வசப்படுத்துவது என்னும் கலையைக் கற்பதற்கு மனதில் எண்ணம் மட்டுமே தேவை. நீங்கள் மற்றவர்களை அன்போடு வசப்படுத்த விரும்பினால் அவர்களை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

- கன்ப்பூசியஸ் -

மனசாட்சியைப் பொறுத்து முடிவு செய்யும் போது, முதலில் தோன்றும் எண்ணங்களே சிறப்பானவை.புத்திசாலித்தனத்தைப் பொறுத்துத் திர்மானிக்க வேண்டியிருக்கும் போது கடைசியாகத் தோன்றும் எண்ணங்களே சிறப்பானவை.

- ராபர்ட் ஹால் -

PUBLIC LIBRARY
JAFFNA



# ஹலோ

## ஹலோ நண்பர்களே....

வணக்கமும்,வாழ்த்துக்களும்....

- ஒரு சிறிய- தவிர்க்க முடியாத-அதே சமயம் வளர்ச்சிப் போக்கை கருத்தில் கொண்ட - இடைவெளியின் பின்னர் உங்கள் கரங்களில் ஹலோ ...
- எப்போதுமே புதிதாக, பயனுள்ளதாக அதே சமயம் தரமாகவும் ஏதாவது ஒன்றினை செய்ய வேண்டும் என எண்ணும் போது அதற்கு முறையான திட்டமிடல் என்பது அவசியமாகின்றது. இதுவரை வெளியாகிய "ஹலோ" இதழ்கள் தந்த பட்டறிவு அனுபவம் என்பது புதிய ஆக்க பூர்வமான சிந்தனைத்தளத்தில் செயற்படத்தூண்டியிருக் கிறது் என்றால் மிகையில்லை. அதுவே ஹலோவின் இத்தகைய புதிய தோற்ற மாறுதலுக்கான அடிப்படை.
- நாட்டின் பொருளாதாரத்தளமும் மக்களின் பொருளாதார வளமும் நாளுக்கு நாள் புதிய புதிய சவால்களை யும், நெருக்கடிகளையும் சர்வதேச சூழலுக் கேற்ற எதிர்கொள்ளத்திணறும் நிலையில் நமது அன்றாட வாழ்வியக்கமானது எதிர்காலம் குறித்து தொலை நோக்கு சிந்தனையின் அடிப்படையிலான திட்ட மிடலின்றி சரியான இலக்கு நோக்கி முன்னேறுதல் சாத்தியமே இல்லை.
- தொழில் துறை,வர்த்தகதுறை,உற்பத்தி துறை, சந்தைப் படுத்தல்துறை.... என எந்தத்துறையானாலும் இன்று தம்மை வலுப்படுத்தி முன்னேறி உயர பல்வேறு போட்டிகளை சந்தித்தே தீரவேண்டிய நிலையில் அன்றாடம் சமயோசித சிந்தனையுடன் செயற்பட வேண்டியுள்ளது
- புதிய நெருக்கடிகளுக்கு மத்தியில் புதிய புதிய வாய்ப்புக் களும் உருவாகிக் கொண்டே இருப்பதுதான் நம்பிக்கை தரும் ஒரே விடயம்.
- வர்த்தகச் சந்தை விஸ்தரிப்பு என்பதே பொருளாதார வளர்ச்சியின் மூலபலமாக இருக்கும் காரணத்தால், நாடு களுக்கிடையேயான மேலாதிக்க போட்டியின் அடித்தள மாகவும் அதுவே உள்ளது.
- மக்களிடையேயான பொருட் கொள்வனவு கவர்ச்சியினை இலக்குவைத்தே உற்பத்தி, சந்தைப்படுத்தல் , வர்த்தகச் செயற்பாடு போன்றவற்றை திட்டமிடும் பணியே ஒரு போட்டிச் செயற்பாடாக கருதப்படுகின்றது.
- பொருட் கொள்வனவு கவர்ச்சியை, அல்லது ஈடுபாட்டினை மக்களிடையே ஏற்படுத்துவது சரியானதும் நம்பிக் கையை ஏற்படுத்தும் விதத்திலான விளம்பரங்களே ஆகும்.எனவே தான் இன்றைய யுகம் விளம்பரங்களின் ஆக்கிரமிப்பால் பிரமிக்க வைக்கும் நிலையை ஏற்படுத் தியுள்ளது.

  1. விளம்பரம் இன்றேல் பெரும் பணம் இல்லை
  2. வியாபாரத்துக்கு அழகு விளம்பரம் செய்தல்
  3. கடுகு சிறிது காரம் பெரிது - விளம்பரம் சிறிது பயன் பெரிது

  என்றெல்லாம் சில தசாப்தங்களுக்கு முன்னரே சம்பந் தப்பட்ட துறைகள் அறிஞர்கள் கருத்து கூறியதைநினைவு கொள்வது அவசியமாகியுள்ளது.
- தங்கத்தின் தரத்தை உறுதிப்படுத்தவே இன்று விளம்பரம் தேவையாக உள்ளது என்றால் யோசித்துப்பாருங்கள்!
- ஹலோ " வர்த்தகர்கள் ,உற்பத்தியாளர்கள், இறக்குமதி யாளர்கள் , சந்தைப்படுத்துவோர் ஆகியவர்களுக்கும் நுகர்வோருக்குமிடையே ஒரு தொடர்பு ஊடகமாக தன்னை கௌரவமாக அடையாளப்படுத்திக்கொண்டுள் ளதை பெருமையாக கருதுகின்றது.
- மேற்குறித்த இருதரப்பு நம்பிக்கையை பெறுவது என்பது சுலபமான விடயமானதல்ல அந்த நம்பிக்கையை பெறும் வகையில் ஹலோ" கடந்த சில மாதங்களாக கடுமையாக உழைத்துள்ளமையை குறிப்பிட்டே ஆகவேண்டும். இதன் பெறுபேறாக ஹலோ" மீதான அக்கறை கொண் டோரின் ஆலோசனைகள் அவர்கள் வழங்கும் ஊக்கம் ஆகியவற்றின் பிரதி பலிப்பாகவே ஹலோ" ஒரு புதிய இணைப்பு வடிவத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை நீங்களும் வரவேற்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம் .
- உங்கள் எண்ணங்களையும் தெரிவியுங்கள் எமது வளர்ச்சியின்பால் அக்கறை கொண்ட அணைவருக்கும் எமது நன்றிகள் . இனிவரும் "ஹலோ" இதழ்கள் பல் சுவை அம்சங்களுடன் கூடிய உள்ளடக்கத்தைக் கொண்ட அறிவுக்கவசமாகவும் இருக்கும் என உறுதி கூறுகின்றோம்.

தொடர்ந்து "ஹலோ" சொல்லி இணைவோம்.

வெளியீட்டாளர்கள்.

வெளியீடு: துவரகா வெளியீட்டகம்
அச்சமைப்பு: நோபிள் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
817, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். தொ.இல:021 221 9212

சுயமாக முன்னேற வழி



# ஏற்றம் பெற மாற்றி யோசி...

சிந்திக்கின்ற ஆற்றல் சிறந்தது. உயர்ந்தது உயர்த் துவது. மனிதனுக்குக் கிடைத்த தனிப்பெரும் பேறுகளில் ஒன்று சிந்தனை. மற்றைய உயிரினங்களி லிருந்து மனிதனை வேறுபடுத்துவது பகுத்தறிவு. அந்தப் பகுத்தறிவின் விளைச்சல் சிந்தனை.

"எண்ணித் துணிக கருமம்", என்பது வள்ளுவப் பெருந்தகை வாக்கு. மேற்போக்காகப் பார்த்தால், கேட்டால், எல்லோரும், "எண்ணித் தானே செயல்படு கின்றோம். எண்ணாமல் எப்படிச் செயல்பட முடியும்?" என்று கேட்பார்கள். உண்மையில் எல்லோரும், ஒவ் வொரு சிறப்பான செயலுக்கு முன்பும் சிந்திக்கின்றார் களா, என்பதை ஆராய்ந்து பார்த்தால், பெரும்பாலான வர்களை சிந்திக்காமல் செயல்படுவதை அறியலாம். சிலர், ஒரு செயலை மேற்கொண்டு பாதக விளைவு ஏற் படும் பொழுது "நான் அவசரப்பட்டு விட்டேன். முன்னதாகச் சிந்தித்திருந்தால் நான் இதைச் செய்திருக்கமாட்டேன்", என்று கூறுவதைக் காணலாம். சிந்திப்பது மனப்பயிற்சி. அலைகின்ற மனத்தை ஒருமுகப்படுத்தி சிந்திக்க உள்ளொளி பிறக்கும்.

தொழில், வாணிபம் செய்கின்றவர்கள் பெரும்பாலும் சிந்திப்பார்கள். "ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது" என்பது தொழில் பால பாடம், அரிச்சுவடி. ஏனென்றால், தொழில், வாணிபச் செயல்பாடுகள் நீரில் குதிப்பதைப் போலில்லாமல், கரணம் அடிப்பதைப் போலிருக்கும். "கரணம் தப்பி னால் மரணம்" என்பது பழமொழி. சரியான சிந்தனையும் செயலும் இல்லாவிட்டால் தொழிலில் ஆதாயம் கிடைக்காது் இழப்பு ஏற்படும்.

சிந்தனையிலும் சாதிக்க விரும்புபவர் சிந்தனை மாறுபட்டதாக இருக்க வேண்டும் எல்லோரையும் போல மரபு வழியில் சிந்திப்பது போன தடத்திலேயே போவது. நமக்கு முன்னால் பலர் நடந்த வழியில் நாம் நடக்கின்ற பொழுது, மற்றவர்கள் பார்த்ததைத் தான் நாம் பார்ப்போம். மற்றவர்கள் செயல்பட்டதைப் போன்றுதான் நாமும் செயல்படுவோம்.

மாற்றிச் சிந்திப்பது என்பது புதிய பாதையில் செல்வது போன்றது. சான்றாக ஒருவர் தனது வீட்டிலிருந்து பணி செய்யும் இடத்திற்கு செல்வதைக் கூறலாம். பெரும்பாலானவர்கள் குறுக்கு வழி எனக கருதுவதில் தொடர்ந்து செல்வார்கள். பாதைப் பழக்கப் பட்டுவிடும். வழியில் அதே காட்சிகள் காலப்போக்கில் பல முகங்கள் பழக்கப்பட்டுவிடும்.

மாறாக ஒருவர் மாற்றுப் பாதைகள் இருந்தால் ஒவ்வொரு நாளும் வேறு பாதையில் செல்கின்றார் என வைத்துக்கொள்வோம். அவர் மற்றவருக்கு விந்தையானவராகத் தோன்றலாம். கேலி கூடச் செய்ய லாம். ஆனால் அவரிடம் கேட்டால், "பாதையை மாற்றுகின்ற பொழுது நான் புதிய மனிதர்களை, காட்சிகளைக் காண்கிறேன். புதியனவற்றைப் பார்க் கின்ற பொழுது புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. மறுபடி பழைய பர்தையில் நடக்கின்ற பொழுது அங்கு மாற்றங்களை உணர்கின்றேன்.", என்று கூறலாம்.

வாழ்க்கையில் சாதனைகள் புரிந்தவர்கள் எல்லாம் மாற்றிச் சிந்தித்தவர்கள் புதிதாகச் சிந்தித்த வர்கள் வரலாற்றில் இதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன.

"பறவையைப் கண்டான் விமானம் படைத் தான்" என்று பொதுப்படையாக கூறுவார்கள். உண்மை யில் விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் பறவையைப் பார்த்தா பறக்க நினைத்தார்கள்? அவர் களுக்கு முன்னால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்கள் பறவையை பார்த்துக்கொண்டு தானே இருந்தார்கள். ஏன் பறக்க நினைக்கவில்லை? விமானத்தைக் கண்டு பிடிக்க வில்லை?

ரைட் சகோதரர்களுக்கு முந்தியவர்களுக்கும் பறக்கும் ஆசை இருந்தது. தேவ தூதர்கள் பறப்பதாக கற்பனை செய்தார்கள். இறக்கை இருந்தால் பறக்கலாம் என நினைத்தார்கள். மனித உடல் கனமாக இருப்பதால் பறக்க முடியாதெனக் கருதினார்கள். புவி ஈர்ப்புச் சக்தியை நம்பினார்கள். கனமான பொருளைத் தூக்கி எறிந்தால், மேலே போய் கீழே விழும் பறக்காது என்பது அறிவியல் பாடம்.

மாற்றிச் சிந்திப்பதற்கு மற்றொரு நிகழ் வினைக் கூறலாம். சுய முன்னேற்ற நூல்கள் எழுதிப் புகழ் பெற்றவர் எம்.எஸ்.உதயமூர்த்தி. அவர் மாற்றிச் சிந்தித்ததால் பெற்ற வெற்றிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

அவர் அறிவியல் கற்றவர். கல்லூரிப் பேராசிரியர். வேதியியல் கற்பிக்க அமெரிக்கா சென்றவர். அவர் உள்ளத்தில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்கள் பற்றி ஒரு கேள்வி பிறந்தது. எல்லா மாணவர்களும் ஒன்று போல்தான் ஆய்வு செய்கின்றனர். ஏன் சில மாணவர்கள் மட்டும் வெற்றி பெறுகின்றனர்? என்பது தான் அந்தக் கேள்வி. அதற்கு விடை தேடும் முயற்சியில் உளவியல் பற்றி படித்து ஆய்ந்து உளவியல் போரசிரியரானார்.

ஒருமுறை உணவு விடுதிக்குச் சாப்பிடச் சென்ற போது ஓர் அமெரிக்கரைப் பார்த்தார். அவர் மிகவும் கவலையோடு காணப்பட்டார். அவரிடம் பேச்சு கொடுத்து அவரது கவலைக்கான காரணத்தை கேட்டறிந்தார்.

அவர், பூமிக்கடியில் இருக்கும் எண்ணெயை தோண்டி எடுத்து விற்பவர். ஓரிடத்தில் பல அடி ஆழமாகத் தோண்டியும் எண்ணெய் கிடைக்கவில்லை என்பதைக் கூறினார். "மேலும் சில அடிகள் தோண்டினால் எண்ணெய் கிடைக்கலாம்" என்று உதயமூர்த்தி கூற, "எனக்குப் பொறுமை



சிந்தனையிலும் சாதிக்கவிரும் புபவர் சிந்தனை மாறுபட்டதாக இருக்க வேண்டும் எல்லோரை யும்போல மரபு வழியில் சிந்திப் பது போன தடத்திலேயே போவது. நமக்கு முன்னால் பலர் நடந்த வழியில் நாம் நடக்கின்ற பொழுது, மற்றவர்கள் பார்த்ததைத் தான் நாம் பார்ப்போம். மற்றவர்கள் செயல்பட்டதைப் போன்றுதான் நாமும் செயல்படுவோம்.

இல்லை. வேண்டுமானால் நீங்கள் தோண்டிப் பாருங்கள்" என்றாராம்.

உதயமூர்த்தி, "என்னிடம் முதலீடு செய்யப் பணம் இல்லை", என்றார். "நான் கடனுக்கு எனது எண்ணெய் கிணற்றைத் தருகிறேன்", என்று அமெரிக்கர் கூற அவர் வாங்கி சில அடிகள் தோண் டவே எண்ணெய் கிடைத்திருக்கின்றது. பின்பு கைவிடப்பட்ட எண்ணெய்க் கிணறுகளைக் குத் தகைக்கு எடுத்து நிறையச் சம்பாதித்தார்.

நாம்வாழுகின்ற உலகம் விரைந்து மாறிக் கொண்டிருக்கின்றது. இந்த மாற்றங்கள் மக்களின் வாழ்க்கை முறையைத் தலைகீழாகப் புரட்டிக் கொண்டிருக்கிறது.

மரபு வழிச் சிந்தனையால் இந்தப் புதுப்புது மாற்றங்களை எதிர்கொள்ள முடியாது. நமது உணவு, உடை, இருப்பிடம், தொழில், பழக்க வழக்கங்கள், உறவு முறைகள் எல்லாம் மாறுகின்றன. இவற்றை ஒட்டி வேண்டிய தேவைப் பொருட்களும், பணிகளும் மாறுகின்றன. இவற்றை வழங்குவது தான் தொழிலும் வாணிபமும்.

சிந்தனை தொலைநோக்கோடு அமைய வேண்டும். நாட்டு நடப்புகளை உற்றுநோக்கு வதும், செய்தித் தாள்களிலும், பிற ஊடகங் களிலும் கிடைக்கின்ற தகவல்களும் புள்ளி விபரங்களும் நமது சிந்தனைக்கு மூலப் பொருட் களாகும். மாற்றி யோசிக்கின்றவர்களின் வழி தனிவழியாக இருக்கும்: அவர்களுக்கு வானமும் வசப்படும்.


• நன்றி: வளர்தொழில்



## உலகநாதன் பார்வையில்...

"உலகம் போற போக்கைப்பாரு டிங்கிரி டிங்காலே...." என்று அந்தக் காலத்திலே ஒரு பாட்டு... இண்டைக்கு உலகம் எங்கோபோகுது எப்படிப் போகுது எண்டு ஒண்டுமே புரியல்லை... விலைவாசி கிடு கிடு வென ஏறிக்கொண்டே போகுது.. தெருவாசிகள் மட்டும் அதிகம் கவலைபடுவதாக இல்லை.. சித்தன் போக்கு சிவன் போக்கு என்ற நிலை அவர்களுக்கு..

எல்லாத்துக்கும் உலகமயமாதல் தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். உலகம் கலகமயமாதலாக இருக்கும்போது. எல்லாம் தலைகீழாகத்தான் இருக்கும் பாருங்க... மனிதனுக்கு மட்டுமல்ல உலகத்திற்கும் தலையைச் சுற்றாமல் என்ன செய்யும்?



சிறுகதை

# கனவு

**குந்தவை**

பொழுது படும் நேரம், வெங்காயப் பாத்திகளைப் பார்க்க என வந்தவன், நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தவாறு நின்றான். ஆகாயத்தை மூட என தொய்ய தொய்ய ஒரு கறுப்பு மேலேறி வந்து கொண்டிருந்தது. தன்னுள்ளே சிறிதும் பெரிதுமாய் வெவ்வேறு கறுப்பு மேகங் களையும் சுமந்து கொண்டு மழை வரப் போகிறது. இந்த மழை நேற்றிரவோ, இன்று விடிகாலையிலோ வந்திருக்கலாம். அப்படி வந்திருந்தால், இன்று காலை நீர் இறைப்புக்குச் செலவான மண்ணெண்ணெய் மிச்சமாயிருக்கும். மண்ணெண்ணெய் மட்டுமா, உடல் உழைப்புத்தான்.

என்னவோ, விடிகாலையில் சைக்கிள் கேரியரில் வாட்டர் பம்மோடு, தோட்டத்துக்கு வரும்பொழுது உற்சாகமாகத்தானிருக்கும், தோளில் சுமந்த ஹோஸ் பைப்பை நீட்டி, கிணற்றுக்குள் இறக்கி பம் வாய்க்குள் மண்ணெணெய் ஊற்றி, கழுத்து மடிப்பிற்குள் துண்டுக் கயிற்றைச் சுற்றி இழுத்து 'ஸ்ராற்' பண்ணினால் 'குபு குபு' என தண்ணீர் பாயத் துவங்கும். வேகத்துடன் கால் வட்டமாய் வந்து விழுமிடத்தில் நீருக்குள் காலை விட்டுக்கொண்டு நிற்பதே ஒரு தனிச் சுகம். நீர் ஓடி வாய்க்காலை நிறைக்கையில், காலடியில் குறுகுறுக்கும் நீரில் கால் பதித்து, பாத்தி மாற்றி விடும்பொழுது சந்தோஷமாக இருக்கும்.

ஆனால் சூரியன் முதுகில் சுள்ளென உறைக்கத் துவங்குகையில், வியர்வைக் கசகசப்பில் பசிக்களைப்பில், நீர் பாய்ச்ச வேண்டிய பாத்திகள் மாளாதவைகளாகத் தோன்றும்.

அனேகமாக, தண்ணீர் பாய்ச்சி முடியும் நேரத்தில் அம்மா வந்து விடுவாள். கிணற்றுக்குள் இருந்து இழுத்துப் போட்ட ஹோஸ் பைப்பை பெரிய வட்டமாகச் சுற்றி, வட்டம் அவிழாமல் குறுக்கே கட்டு கட்டி, வாட்டர் பம்மை, மீளக் காரியரிலேற்றிக் கட்டி விட்டு சைக்கிளிலேறி, காலூன்றி நிற்பவனருகே, தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வருவாள். அதை ஒரு கையால் வாங்கி தோளில் தொற்ற வைத்து, மறுகையால் ஹாண்டில் பாரைக் கட்டுப்படுத்த முயன்றவாறு, காலை எடுத்து பெடலை மிதிக்க ஹாண்டில் பார் பாலன்ஸ் செய்ய விடாமல், அலைக்கழிக்கும் ஒவ்வொரு முறையும் எங்கே விழுந்து விடுவானோ என்ற பயம்தான்.

பதினைந்து நாள்களுக்கொரு முறை, பூச்சி மருந்து அடிக்கும்பொழுது மட்டும் என்ன? உடல் நோதான். மருந்துக் கலவை நிரம்பிய தகரத்தை முதுகில் போட்டு அதன் இரு பக்க வார்களையும் தோளில் மாட்டி, வரம்புகளிடையே நடந்து மருந்து அடிக்கையில் தோள்கள் இற்று விடுவது போல வலி எடுக்கும். சமாளிக்க வேண்டும்.

உழைப்பு மட்டுமல்ல, எவ்வளவு காசும் வேண்டும் இந்த வெங்காயச் செய்கைக்கு? எருப் போட்டு நிலத்தைக் கொத்திவிட, அவன் ஒருவனால் ஆகாது. வேறு சிலரையும் பிடிக்க வேண்டும். அவர்களுக்கு கூலி, சாப்பாடு, தேத்தண்ணீர். பிறகு விதை வெங்காயம் வாங்க நட, நெல்லியடிக்குப் போய் பூச்சி மருந்து வாங்க, களை பிடுங்க - எல்லாம் செலவுதான். நீர் இறைக்கும் நாள்களில் 'பம்பை' வாடகைக்குப் பிடிக்கத் தேவையில்லை நல்லவேளை. யாரோ ஐந்து விவசாயிகளுக்கு ஒரு வாட்டர் பம்ப் என்று இலவசமாய் தந்திருந்தார்கள். மஞ்சள் நிறத்திலுள்ள அந்த FAO எழுத்துகளைத் தடவிக் கொடுக்கையில் ஒரு வித நன்றி உணர்வு.

வெங்காயம் கிண்டும் நாள்களில் செலவு கை மீறி விட்ட நிலையில் அம்மா, தங்கைகளைக் கூட்டிக் கொண்டு, உதவிக்கு வந்து விடுவாள். பரவாயில்லை.

ஆனால், வெங்காயம் கிண்டி முடியும் காலங்களில் தான், வெங்காய விலை சரேலெனச் சரியும். வெங்காயத்தை ஆய்ந்து, குந்து குந்தாகக் கட்டி கொட்டில் கூரைக் கம்புகளில் தூக்கி, விலை உயருமெனக் காத்திருந்து கடைசியில் அவை காய்ந்து உதிர்ந்து, சருகாகிப் போவதைக் காணச் சகிக்காது, வந்த விலைக்குத் தள்ளி...


ஆனால், இந்த முறை, இப்படி நட்டப்படத் தேவையில்லை என்று தான் எல்லோரும் சொல்கிறார்கள். யாழ்ப்பாணத்திற்கு தரை வழிப் பாதை திறந்த பின்பு வெளி மாவட்டத்திலிருந்து வரும் ஆட்கள் சொன்ன விலைக்கே வெங்காயத்தை வாங்கிச் செல்கின்றார்கள். இந்த முறையாவது அம்மா ஒவ்வொரு வெங்காயப் பயிர் செய்கை துவங்கும் பொழுது சொல்வது போல், "முந்நூறு தறை, ஐம்பதினாயிரம் வரும்" என்பது பலிக்க வேண்டும்.

வானம் தூறலெடுக்கத் துவங்கிவிட்டது, நேராக நிமிர்ந்து நின்ற இளம் வெங்காயப் பயிர்களிடையே மழைத்துளிகள் உள் இறங்கின. அவன் வீட்டை நோக்கி நடக்கலானான். நனைந்து நனைந்து நடக்கையில், இந்த மழை பலத்து, இன்றிரவு பக்கத்தூர் அம்மன் கோயில் திருவிழாவின் பொழுது நடக்கப் போகும் 'கோஷ்டி கானத்தை'க் குழப்பி விடுமோ என்ற எண்ணம் தவிப்பாய் எழுந்தது.

அருமையான 'கோஷ்டி' இன்று வரப்போகிறது. "காந்தன் - கந்தர்வன்" கோஷ்டி அவன் கேட்க வேண்டுமென ஆவலாக இருந்த கோஷ்டி..

'பொடியன்' திருவிழா என்றால்தான் இப்படி கோஷ்டியை அமர்த்துவார்கள். பத்தாம் திருவிழா. ஊரெல்லாம் காசு சேர்த்து, இளைஞர்கள் நடாத்தும் திருவிழா.

குந்தவை :-
நம் மண்ணின் சிறந்த கதாசிரியர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர்.
அற்புதமான சிறுகதைகள் பலவற்றை படைத்த இவரது சிறுகதை "சிறுமை கண்டு பொங்குவாய்" ஆனந்த விகடனில் முத்திரைக் கதையாக வெளியாகி கௌரவம் பெற்றது. "யோகம் இருக்கிறது" என்ற அவரது சிறுகதைத் தொகுதியில் இருந்து இக்கதை நன்றியுடன் மீள்பிரசுரம் செய்யப்படுகிறது.



முதலில் கதாப் பிரசங்கம், நாதஸ்வரக் கச்சேரி என்று ஏதேதோ நடக்கும். கடைசியாகத்தான் 'கோஷ்டி' இரவு பத்துமணிக்குப் பின்தான் தொடங்கும். அவர்கள், பெரிய இசைக் கருவிகளை மேடைக்கு கொண்டு வந்து வைப்பதைப் பார்க்கும் பொழுதே உற்சாகமாகி விடும். இதுவரை தூங்கி விழுந்த கோயில் முன்றல், சட்டென சனக் கூட்டத்தால் நிறைந்து விடும். பாய்களைச் சுருட்டி எடுத்துக் கொண்டு குழந்தை குட்டிகளை இழுத்துக் கொண்டும் சிலர் வந்து விடுவர். ஆனாலும் அந்த கூட்டத்தைக் கவர்ச்சியாக்குவது 'பெட்டைகளின்' பிரசன்னம் தான். இளைஞர்களைப் போல அத்தனை இளம் பெண்களும் குழமி விடுவார்கள்.

முதலில் எப்பொழுதும் ஒரு பிள்ளையார் பாட்டுத்தான். இப்பொழுதெல்லாம் 'பிள்ளையார் சுழி போட்டு' என்ற பாட்டுத்தான். பிறகு சில சமயம், ஒரு முருகன் பாட்டோ அம்மன் பாட்டோ இருக்கும் . பிறகெல்லாம் துள்ளல் பாட்டுக்கள்தான். கானாக்கள், புத்தம் புதிய பாடல்கள். அதுவுமிந்த 'காந்தன் - கந்தர்வன்' கோஷ்டி பாடினால் பிய்த்துக் கொண்டு போகப் போகிறது.

வீட்டிற்கு அருகில் வரும்பொழுது அக்காவின் சத்தம் உள்ளிருந்து கேட்டது. 'கோஷ்டி'. பற்றிய பரவச நினைவுகள் எல்லாம் சட்டென மறைந்து விட்டன. அக்கா, இப்படித்தான், கணவனோடும், மாமியாரோடும் கோபித்துக் கொண்டு வந்ததிலிருந்து, தங்கைமாரோடு ஏகமாய் கிடக்கிறதே என்ற ஆத்திரமாயிருக்கலாம். பேசிய, சீதனச் காசை முழுதாக, தவணை சொல்லாமல், கொடுத்திருந்தால் மாமியார் அவளை திட்டி விரட்டியிருக்க மாட்டாளோ என அவள் நினைப்பதுண்டு. மச்சான் ஒரளவு நல்லவர். சீதனத் தொகையின் மிச்சத்தையும் கொடுத்து "நீங்கள் பிரிந்து தனிக் கடை வைத்து தனிக் குடித்தனம் பண்ணுங்கள்" என்றால் கேட்கக் கூடியவர். ஆனாலதற்கு காசு வேண்டுமே? அக்காவின் கலியாணத்திற்கென ஊர் முழுக்க வாங்கிய கடனே, இன்னும் இப்படியே இருக்கிறது.

அவனைக் கண்டதும் தங்கைமார் அறைக்குள் போய்விட்டனர். அக்கா மட்டும் முணுமுணுப்பாய் ஏதொ சொல்லிக் கொண்டிருந்தாள். ஒன்றையும் கவனிக்காதவன் போல அவன் கடந்து குசினிப் பக்கமாகப் போனான்.

அம்மா தட்டில் போட்டுத் தந்த சோற்றையும் பருப்பையும், பிசைந்து கொண்டே அரசாங்கம் தருமிந்த நிவாரணப் பொருள்களுமில்லாவிட்டால் மாதத்தில் பாதி நாள் பட்டினி கிடக்க வேண்டும்' என்று நினைந்தான்.

கை கழுவி வரும்பொழுது அம்மா கேட்டாள், "சந்திரனும் சிதம்பரி அண்ணனின்ரை மகனும் உன்னைத் தேடி வந்தாங்கள். வழியில் அவங்களைக் கண்ட நீயே?"

'ப்ஸ்' என அவன் வாயினால் அலுத்துக் கொண்டான். "அவங்களுக்கு இன்னம் களை பிடுங்கின காசு குடுக்கேல்லை. அதுதான் கேட்க வந்திருப்பங்கள்."

"கொஞ்சம் நாள் தவணை சொல்லிப் பாரன்"

அவங்கள் கேட்கிறாங்களில்லையம்மா. நெருக்கிறாங்கள். அவசர தேவையாம்."

சற்று எரிச்சலோடு, பாயை விரித்துப் போட்டு படுத்துக்கொண்டான்.

இரண்டு பேருக்கு நாலு நாள் களை பிடுங்கின கூலி. நூற்றி இருபத்தைஞ்சு ரூபாப் படி. ஆயிரம் ரூபா குடுக்க வேணும். காசுக்கு இப்ப எங்க போறது?"

எப்படித்தான் பாடுபட்டாலும், கடன் தீராது போலிருக்கு. அவனும் தான் கிடைக்கும் எல்லா வேலைக்குப் போகிறான். கட்டிட வேலை, தோட்ட வேலை, கப்பல் வந்து, பருத்தித்துறைக் கடலில் நிற்கும் பொழுதுதன் முறை வந்து கூப்பிடப்படும்பொழுது சாமான்கள் இறக்கப் போகிறான். ஒன்றுமில்லாத நாள்களில் வெங்காயத் தோட்டத்தைப் பார்க்கின்றான். இருந்தும் என்ன, எப்பொழுதும் கையை மீறிய செலவுகள். இரண்டு தங்கை, குழந்தையோடு ஒரு அக்கா. இங்கிருந்து உழைத்து, பிழைக்க முடியாது. அவன் நாலைந்து வயதில் பார்த்த இப்பொழுது ஞாபகமே இல்லாத தன் தகப்பனை நினைத்துக் கொண்டான். 'அவர் கொஞ்சம் புத்தியா நடந்திருந்தா. இப்ப நாங்க இப்படி கஷ்டப்பட வேண்டி வந்திருக்குமோ'. இயக்கங்கள் ஆட்சி செய்த அந்த காலத்தில் அவர் நிலைமையை அனுசரித்து வாய் மூடிஇருந்திருக்கலாம். யாரையோ விமர்சித்துககொண்டு திரிந்தாராம். அவர்கள் வந்து, "விசாரித்துவிட்டு அனுப்புகிறோம்" என வேனில் அழைத்துச் சென்றார்களாம், அவ்வளவுதான் பிறகு அம்மா அவரைப் பற்றிய விபரமறிய நடையாய் நடந்தாளாம். பயனில்லை.

நினைவுத் தீவிரத்தைத் தாங்க முடியாமல் எழுந்து வெளியே வந்தான். மழை நின்று விட்டிருந்தது. காய்ந்திருந்த நிலமா கையால் பெய்த மழையை அப்படியே உறிஞ்சி விட்டிருந்தது. அப்படியானால் இன்று கோஷ்டி நடக்கும் இந்த நினைவு வந்ததும், இறுக்கம் தளர்ந்து இதமான காற்று வீசியது போல மனம் சிலிர்த்துக் கொண்டது.

வீட்டிற்குள் போய் கைலியை மாற்றி, வேட்டியை உடுத்திக் கொண்டான். அம்மாவிடம் சொல்லிக் கொண்டு சைக்கிளேறினான். வழியில், படலையருகே நின்று கூப்பிட, தத்தம் வீடுகளிலிருந்து வந்து தன்னோடு இணையப்போகும் நண்பர்களை ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். "யோகன், ரகு, சிவம்".

அவர்களெல்லோரும், கோயிலுக்கு வந்தபொழுது, வெளியில் போடப்பட்டிருந்த மேடையில் தவில் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அவர்கள் அருகே போகாமல் வெளிப்புறச் சுவரோரம் அமர்ந்து கொண்டான். யோகன் ஆளுக்கொரு கடலைச்சுரள் வாங்கி வந்தான். அரட்டைதான்.

தவில் கச்சேரி வெளுத்து வாங்கிவிட்டு முடிந்தது. வெள்ளை வேன் ஒன்று மெதுவாக மேடையருகே, சற்று பின்னால் வந்து நின்றது. அதிலிருந்து பெரிய இசைக்கருவிகள், ஒவ்வொன்றாக மேடைக்கு தூக்கி வரப்பட்டன.

காந்தனையும் கந்தர்வனையும் அடையாளம் காணும் முயற்சியில் அகல விரிந்த கண்களோடு அவர்கள் பார்த்திருந்தனர்.

எழுந்து மேடைக்கு முன்னால் தரையில் வட்டம் காட்டி அமர்ந்தனர். கூட்டம் 'கிடு கிடு' என வரத் துவங்கிவிட்டது.

"எங்கையடா ஆனந்தனைக் காணேல்லை? அவன் ஒரு 'கோஷ்டி'யையும் தவற விடானே இண்டைக்கு இன்னும் காணேல்லை".

'உனக்குத் தெரியாதே? அவன் வெளியில போகப் போறான். அவன்ர மாமா கனடாவிலை இருந்து அவனைக் கூப்பிடுறாராம். ஏஜென்ஸிக்கு காசு கட்டிப் போட்டாராம்.'

உற்சாகம் தளர்ந்து விட்டது போலிருந்தது. கேட்டவர்களுக்கும் சொன்னவனுக்கும் தான்'

பாட்டுத் தொடங்கி விட்டது. முதலில் 'பிள்ளையார் சுழி போட்டு நீ நினைத்ததைத் தொடங்கிவிடு தான். பிறகு ஒரு பெண் வந்து நின்று பாடினாள். "மாணிக்க மூக்குத்தி மதுரை மீனாட்சி"

அடுத்தது, தாடாலடியாக "ஓ போடு" தான். இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் வந்து நின்று பக்கத்தில் அதிரும் இசைக் கருவிகளின் நெளிவு சுழிவுகளுக்கு ஈடு கொடுத்தபடி, பாடினார் பிறகு பாடப்பட்டவையும் எல்லாம் கானாப் பாடல்கள். கூட்டமே உற்சாகத்தில் மிதநதது.

"காஞ்சி வரம் போனேன்" என பாடல் வந்த பொழுது எல்லோருமே அசந்து விட்டார்கள். "புதுப் பாட்டடா" பிரபு தேவாவாகத் தாமே மாறி விட்டதாகப் பிரமை எல்லோருக்கும்.

அந்த நேரத்தில் தான் கூட்டத்தினரிடையே வளைந்து நெளிந்து கொண்டு அவர்களை நோக்கி வந்தான் ஆனந்தன்.

"டேய் மச்சான்" பாடல் தந்த ஏக்காளத்தோடு அவனை ஆரவாரமாக வரவேற்றது. நண்பர் குழாம்.

அவனை நடுவில் இருத்திக் கொண்டனர். "எப்படா, மச்சான், போறாய் கனடாவுக்கு?"

"நேற்று மாமா போனில் கதைச்சவர். ஏஜென்ஸிக்காரனுக்கு எனக்காக அரைவாசிக் காசு கட்டிப் போட்டாராம். ஆறு லட்சம். மிச்சத்தை என்னை அவங்கள் அங்க கொண்டு போய் சேர்ந்தவுடனே குடுத்திடுவாராம். என்னை உடனை, கொழும்பில் வந்து நிக்கட்டாம். இஞ்சையிருக்கிற எஜென்ற் எந்தநேரமும் வருவானாம், என்னைக் கூட்டிக் கொண்டு போக அப்ப நான் புதன்கிழமையே கொழும்புக்கு போகலாமெண்டிருக்கிறன்"

நண்பர்கள், வலிந்து சிரித்தனர். தம் மகிழ்ச்சியை வெளிக்காட்டினர். அவன், கனடா போய் விட்டால், தங்களை மறந்து விடுவானோ என கவலைப்பட்டனர்.

பாட்டு முடிந்ததும், கலையும் கூட்டத்தினரோடு சேர்ந்து கொண்டனர். தத்தம் வீடு வரும் வழியில் ஆனந்தனிடம் சொல்லிக்கொண்டு பிரிந்தனர்.

இப்பொழுது ஆனந்தனோடு, அவன் தான் சேர்ந்து போனான். அவனின் வீட்டைத் தாண்டித்தான் ஆனந்தனின் வீடு இருக்கிறது.

மேற்கே இறங்கிக் கொண்டிருந்த சந்திரன், பாதையோர மரங்களின் இடையே நடுநடுவே புகுந்து கொண்டது.

தன் வீடு வந்தபொழுது "நானும் உன்னோட உன்ரை வீடு மட்டும் கொண்டு வந்து விட்டு விடுறன்" எனச் சொல்லி, அவனோடு சைக்கிளை மிதித்தான். ஆனந்தன் தடுக்கவில்லை.

ஆனந்தனின் வீட்டொழுங்கை வந்து விட்டது. பிறகும் நின்று அவர்கள் பேசிக் கொண்டார்கள். சைக்கிள்களிலிருந்து இறங்கி சைக்கிள்களில் சாய்ந்து கொண்டு பலதையும் பத்தையும் "இனி எப்ப இப்படி ஆறுதலா கதைக்கப் போறம்?"

"நான் அடிக்கடி போனிலையும் கடிதங்களிலையும், உங்களோட கதைச்சுக்கொண்டு தானை இருப்பன். எனக்கும், எப்பவும் ஊர் நினைவும் உங்கட நினைவுமிருக்கும்."

"அப்ப நீ கனடாவுக்குப் போனபிறகு, என்னையும் அங்க கூப்பிடுறீயோ, மச்சான்?" அவன் கேட்டே விட்டான்.

எதிர் புறத்திலிருந்து சற்று நேரம் பதில் வரவில்லை. ஆனந்தனின் முகமும் இருட்டில் சரியாகத் தெரியவில்லை.

"எனக்கு அது ஏலுமெண்டு நான் நினைக்கேல்லை மச்சான். நான் நெடுக கேட்டு அலட்டின பிறகு தானே மாமா என்னைக் கூப்பிடுறார். நான் அங்க போன உடனை, அவர் ஏஜென்ஸிகாரனுக்கு எனக்காக கட்டின காசை உழைச்சுகுடுக்கோணும். பிறகு ஊரிலை எல்லாம் கடனிருக்கு அதைத் தீர்க்க வேணும். மூண்டு தங்கச்சியள் இருக்கு. அதுகளுக்கு கலியாணம் செய்து வைக்கோணும். கடைசித் தம்பி இருக்கிறான். அவனுக்கும் ஒரு வழி காட்டோணும். இப்ப பார், கொழும்பில நிக்கக்கை செலவுக்கெண்டு ஒரு நாப்பதினாயிரம் கைமாத்தா வாங்கிக் கொண்டுதான் போறன். எல்லாத்துக்கும், மாமாவைக் கேட்க எலுமே, சொல்லு...


பிறகு, அவன் காதில் ஒன்றும் விழாமல் போனது ஆனந்தன் சொன்னது.

"அப்ப மச்சான்! நேரம் செண்டு போச்சு, நான் வாறன் பிறகு பாப்பம்" அவன் விடை பெற்றுக் கொண்டான்.

வீட்டிற்கு வந்து கதவைத் தட்டி அம்மா வந்து கதவைத் திறக்க உள்ளே போனான். உள் மண்டபத்தில், அக்கா, குழந்தையோடு நித்திரையாய் இருந்தாள். அவர்களை மிதிக்காமல் கைலிக்கு மாறி, பாயைச் சுருட்டிக் கொண்டு மீண்டும் வெளியில் வந்தான். "வீட்டுக்குள்ளை புழுக்கமாயிருக்கம்மா, நான் வெளித் திண்ணையில படுக்கிறன்".

திண்ணையில் பாய் விரித்துக் கொண்டான். அம்மா உள் கதவைச் சாத்திக் கொண்டாள்.

வெளியிலும் புழுக்கமாகத் தானிருந்தது. அவனுக்கு நீண்டநேரம் நித்திரை வரவில்லை.



# கோணங்கி பதில்கள்

ந.சீலன், கலைமகள் வீதி அரியாலை
கே: விஞ்ஞானிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?
ப: ஆக்கமுயற்சிகளால் அசரவைக்கிறார்கள் அதேவேளை அழிவு முயற்சிகளால் அதிரவும் வைக்கிறார்கள்

வி.றூபன் கோவில் வீதி, யாழ்ன்னாணம்
கே: தந்திரமா? மந்திரமா? எது சக்திவாய்ந்தது?
ப: ராஜதந்திரிகளும் மந்திராலோசனை செய்வதாகத் தானே கூறுகிறார்கள்!

அ.தயா நாவலர் வீதி, அரியாலை
கே: கடவுள் மீதான நம்பிக்கை எப்போது அதிகரிக்கிறது?
ப: மனிதர் மீதான அவநம்பிக்கை அதிகாரிக்கும்போது

ப.ஜோன்சன் குருநகர்.
கே: இந்த உலகில் தர்மத்திற்கு இடமில்லைப்போல் தெரிகிறதே!?
ப: மகாபாரதத்தில் கர்ணனைக் கொல்ல கடவுள் அவதாரமெனக் கூறப்படும் கண்ணன் உட்பட எத்தனைபேர் எத்தனை தந்திரோபாயங்களாக் கையாண்டார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்.

ச.நிஷாந்தன் மூத்தவிநாயகர்கோவிலடி நல்லூர்.
கே: தமிழ்ச் சினிமா இசை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப: இசைப்பாட்டு வசைப்பாட்டாகி விட்டது. மெல்லிசை வல்லிசையாகி விட்டது

தி.சுகந்தி உரும்பிராய்.
கே: பென்னம்பெரிய விளையாட்டுக்களெல்லம் 'சூதாட்டம்' ஆகி வருகிறதே!
ப: சூதாட்டத்தையும் விளையாட்டாகத்தானே நம்மவர்கள் ஆரம்பித்து அழிந்து போகிறார்கள்!?

ச.சர்மிளா மடத்தடி, யாழ்ப்பாணம்.
கே: நமது மண்ணில் கலாசார சீரழிவு பெருகி வருகிறதே!
ப: நமது கலைகளை பேணிப்பாதுகாக்க திராணியற்ற மக்களால் கலாசார சீரழிவை தடுக்க முடியாது!தம்பி.

க.தாரணி கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
கே: கல்வி வியாபாரமாகி விட்டதே!?
ப:ஆதலால் தான், பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் அது பாரமாகி விட்டது.

எ.சுஜிதா கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
கே: தமிழ் மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கு மிடையேயான தொடர்பு எப்படி உள்ளது?
ப: அன்னியோன்னியமாக இருக்க வேண்டியது அந்நியமாகிப் போய்க் கொண்டிருக்கிறது.

அ.ரூபி களபூமி, கரைநகர்.
கே: குடிபோதையில் வீடு வரும் குடிமகன் எப்படிப்பட்டவன்?
ப: குடிகேடன்!

ந.தர்சன் . பருத்தித்துறை வீதி, நல்லூர்.
கே: இருமனம் கலந்தால் திருமணம் என்பது உண்மைதானே?
ப: இருமனம் கலைந்தால் மறுமணம் இதுவும் உண் மை தானே?

அ.மதி இருபாலை, கோப்பாய்.
கே.சிந்தித்து செயற்படாதான் வாழ்க்கை எப்படி இருக்கும்?
ப:சந்தி சிரிக்கும் விடயமாக இருக்கும்.

க.தில்லையம்பலம் அச்சுவேலி
கே: தேர்தல்கள் தமிழ்மக்களுக்கு ஏதாவது தந்துள்ளனவா?
ப:தேறுதலை, ஆறதலை, மாறுதலை, என எதையுமே தரவில்லைத் தம்பி...!

எ.கந்தசாமி வல்லை
கே: நீங்கள் சித்தர்கள் யாரையேனும் சந்தித்திருக் கிறீர்களா?
ப: ஆன்மீகச் சித்தர்களை சந்திக்கும் பாக்கியம் எனக்கில்லை. அரசியல் சித்துவிளையாட்டுக்காரர் அநேகரைச் சந்திக்கும் அபாக்கியம் எனக்குண்டு.

வ.சுப்பிரமணியம் கரவெட்டி
கே: மெகாசீரியல் பார்த்த அனுபவமுண்டா?
ப: தமிழரின் அரசியல் கட்சிகள் நடத்தும் அரசியல் சீரியலை தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக் கிறோமே .... அதைவிட ஒரு மெகா சீரியல் பார்க்க வேண்டுமா?

ம.பிரியா ஒட்டிசுட்டான்
கே: எது அவமானகரமானது?
ப: சமாதானத்தின் பேரால் உரிமைகளை தானமாக யாசிப்பது

த.தீபன் சாவகச்சேரி
கே:: எவன் மிக மோசமான சர்வாதிகாரி?
ப: அணுக்குண்டின் பின்பலத்தில் நின்று கொண்டு வல்லாண்மை பேசும் ஜனநாயக வாதி!

ப.தர்மகுலராஜா கரவெட்டி
கே: மண்ணாசை தானே எல்லத்துன்பங்களுக்கும் காரணம்?
ப:மண்ணை ஆளும் மன்னனும் மண்ணோடு மண்ணாகி போவதை உணராதவரின் ஆசையே அது!

வி.சோபனா துன்னாலை
கே: மதுரமானது எது?
ப: மதியை மயக்கும் மதுவல்ல... மனதை மயக்கும் இசையே..!

சி.யசோ மட்டக்களப்பு
கே:முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம், போல் இன்று ஏதாவது உள்ளதா?
ப.சங்கக் கடைகள் மட்டும் உள்ளன.

செ.மதுவிழி ஊர்காவற்றுறை
கே: ஆறடி நிலத்துள் அடங்குவதா? ஒரு பிடி சாம்பராய் போவதா? எது மேலானது?
ப: சடமான பின் ஆறடி என்ன? ஒரு பிடி என்ன?

பெ.அமுதநிலா மல்லாவி
கே: பணிவு - துணிவு எது நன்மைபயக்கும்?
ப:துணிவற்ற பணிவு கோழைக்குரியது பணிவுள்ள துணிவு வீரர்க்குரியது...

செ.பூவிழி கோப்பாய்
கே: எது பரிகாசத்திற்குரிய விடயம்?
ப: மத வெறியனின் இறைபக்தி

ஆ.கோகுலன் கிளிநொச்சி
கே: அறிஞன் - கலைஞன் ஒப்பிடுங்கள் பார்ப்பம்?
ப: அறிஞன் வரலாற்றை உருவாக்குவான் கலைஞன் - வரலாறாய் உருவாகுவான்.

**கோணங்கியிடம் கேள்விகள் கேட்க விரும்புவோர் கேள்வி களை ஒரு தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**
**"ஹலோ"**
**துவாரகா வெளியீட்டகம்,**
**817,ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**





# பிள்ளைக் குரல்

மௌனம் கவிந்திருக்கும்
ஓர் இரவுப் பொழுதில்
எனக்குள் துளிர்க்கிறது
உன் நினைவு.
காட்டாற்று வெள்ளத்தின்
பெருக்கெடுப்பில்
அள்ளுண்டு
அகதியாகிவிட்ட போதும்,
நீ
ஊட்டிய பாலின் துளிகள்
இனிக்கின்றன,
இன்னமும் என் நாவில்
உனக்காக வாழ்ந்த வாழ்வு
சிதைந்து போன பின்பும்,
துரத்திக் கொண்டிருக்கும்
துயரங்களின் மத்தியிலும்
மறந்திருக்க முடியவில்லை உன்னை.
சிறகுகள் வெட்டப்பட்டபின்பும்
பறத்தல் சிறகடிக்கிறது எனக்குள்!
அவமானங்களின் நடுவிலும்
அசைகிறது என்
இரத்த அணுக்கள்
கடந்துபோன துயரங்களின்
வலியினால்
அவஸ்தையுறும் போதும்,
உயிர் வீணை
இசைக்கிறது உன் பாடலை
பெருங்குரலெடுக்க முடியாமல்
நடுங்குகிறதென் குரல்
எனக்கிந்த வாழ்வை
எழுதியவனைச் சபித்தபோதும்
ஈரலித்தே கிடக்கிறது
என் இதயம்.
என் முன் நிரம்பிவழியும்
பாசங்குகளின் முன்
துவள்கின்றபோதும்
தூக்கி நிறுத்துகின்றன உன்
நினைவுகள்.
தாயே,
தொப்புட் கொடி அறுக்கப்பட்டபிறகும்
சுவாசிக்கின்றேன்
உன் பிராண வாயுவை.
எனக்கென இருந்த
எல்லாம் இழந்த பின்பும்
உனக்கென நிகழ்கிறது
என் எழுகை.

- இரா.சிவசக்தி -




முறைப்படுத்துவது முதலிடம் பெற்றது. மனத்தின் செயல்கள் மற்றும் வெற்றிகளுக்கு அதிகநேரம் தேவைப்படுகிறது - கையிலுள்ள பிரச்சினையை, சாத்தி யமாகக் கூடிய பல கோணங்களில் ஆராய்ந்து, பின்விளைவுகளை கணக்கிலெடுத்து, அவற்றை சமாளிப்பதற்கான திட்டங்கள் தீட்டி பிறகு வெற்றி பெற வேண்டியுள்ளது.உங்கள் எதிரிகளை நீங்கள் வெற்றிகொள்ள வேண்டுமென்றால், உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை குறைந்த நேரத்தில் மிகவும் திறமையாகச் செய்ய வேண்டியுள்ளது. இதுதான் இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.




# ஒத்திப்போடுதல் தோல்விக்கு வித்தாகும்.

இருந்தும் மரபு வழியாக நமது அணுக்களில் வந்த எதையும் தாமதமாகச் செய்வது, இலகுவாகச் செயல் படுவது என்னும் தன்மைகள் இன்றும் நம்மை விட்டுப் போகவி ல்லை. தாமதித்து செயல்படுவது நமது குழந்தைப் பருவத்திலேயே தொடங்கி விடுகின்றது. பள்ளிக்குச் செல்லும் சிறு வன், பேருந்து சரியாக காலை 8 மணிக்கு வரும் என்றும் தெரிந்தும் 7.30க்கு எழுந்து காலைக் கடன்களை முடித்து, சிற்றுண்டி கூட சாப்பிடமால் பேருந்தைப் பிடிக்க ஓடுகிறான். இதன்மூலம் அவன் பெற்றோ ர்களின் கவலைக்கு காரணமாகிறான். இதே சிறுவன் பரீட்சைக்கு ஒரு வாரத்தி ற்கு முன்புதான் தனது பாடங்களையே படிக்கத் தொடங்குகிறான். தாமதம் செய் வதில் இளைஞர்கள் ஒன்றும் குறைந் தவர்கள் அல்லர். தங்கள் நலனுக்கு ஊறு செய்கிறோம் என்று நன்கு தெரிந்தும் அவ ர்கள் வேண்டுமென்றே செய்ய வேண்டிய வேலைகளை ஒத்திப் போடுவதோடு, அதனை மற்றவர்கள் பொறுத்தருள வேண்டும் என்பதற்காக ஏராளமான சாக்குப் போக்குகளையும் கண்டுபிடிக்கிறனர்.

விரைந்தோடும் இன்றைய சமுதாயத்தில் ஒத்திப்போடும் இந்த மனப்பான்மை மிகவும் அபாயகரமாக வளர்ச்சியுற்று, நமது திறமைக்கும் வளர்ச்சிக்கும் சிறிதும் பொருந்தாத மனோ வியாதியாக மாறியுள்ளது. ஒத்திப்போடும் மனப்பான்மைக்கு தன்னம்பிக்கை இன்மையும், தோல்வியினால் உண்டாகும் அச்ச உணர்வுமே அதிகாரணங்களாகும் என்று சந்தேகிக்கப்படுகின்றன. ஒருவனிடம் தன்னம்பிக்கை இருந்ததென்றால் அவன் தனது வாழ்க்கை மற்றும் பணியை குறிக்கோள்களுடனும், இலட்சியங்களுடனும் அமைத்துக் கொள்கிறான். அவன் எல்லாவற்றையும் ஒழுங்குமுறையில், காலவரையறைக்குள் செய்து முடிக்கிறான். போதுமான நம்பிக்கை இல்லாதபோது ஒருவனது நேரம் மற்றும் கவனத்திற்கான எந்தவொரு நியாயமான தேவையின் மீதும் பெரும் சீற்றம் உண்டாகிறது. இதற்கு உடனே கிடைக்கும் பதில், உறுத்தும் தேவையையும் மொத்தப் பிரச்சினையையும் ஒத்திப்போடுவதாக இருக்கிறது. ஆகவே, சூழ்நிலை நன்கு புரிந்துகொண்டு நியாயமற்ற காரணத்திற்கு ஏதேனும் காரணங்கள் இருந்தால் அவற்றை தவிர்ப்பது இன்றியமையாததாகும். நீங்களும் ஏதோ ஒரு விதத்தில் ஒத்திப்போடும் பழக்கத்திற்கு அடிமையானவரா? அப்படியானால், அந்தப் பொறியில் உங்களை சிக்க வைத்த ஆரம்பத் தூண்டு சக்தி எதுவென்று ஆராய்ந்து அதனை தவிர்த்து விட்டீர்களென்றால் நிச்சயம் அந்தப் பழக்கத்தை உங்களால் வெற்றி கொள்ள முடியும்.

---




# இணைய வணிகம் 3 வகைகள்

1969 ஆம் ஆண்டு தொடங்கிய சில கணினிகளை இணைத்துத் தொடங்கப்பட்ட இணைவலை, பல கோடிக் கணக்கான கணினிகளை இணைத்துக் கொண்டு இன்று உலக அளவில் விரி வடை ந்துள்ளது. இன்றைய வாழ்க்கையின் தவிர்க்க இயலாத பகுதியாக இணையம் மாறிவருகிறது.இந்த வளர்ச்சி ஆன்லைன் வணிகம் என்ற புதிய தொழில் வடிவத்தையும் வழங்கியுள்ளது. இணையத்தின் வழியாக நடைபெறும் இந்த வணிகத்தை அவரவர் தேவைக்கேற்ப அமைத்துக்கொள்ளலாம். ஆன்லைன் வணிகத்தை பொறுத்தவரையில் மூன்று மாதிரிகள் உண்டு. 1. டேட்டாபேஸ் வகை, 2. இ.காமர்ஸ் வகை. 3. அட்வர்ட்டைசிங் - சேல்ஸ் வகை

டேட்டாபேஸ் வகை (DATABACEW MODEL)வேலைவாய்ப்பு வழங்கும் இணைய தளங்கள், திருமணத் தகவல் இணைய தளங்கள், சொத்து வாங்குவது விற்பது தொடர்பான இணைய தளங்கள் போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாக சொல்லலாம்.

இ - காமர்ஸ் வகை ( E -COMMERCE MODEL): பொருள் / சேவைகளை விற்பனை செய்யும் இணைய தளங்கள் இவை. பயண முகவர் சேவை (டிக்கட் முன்பதிவு உள்ளிட்ட சேவைகள்) வழங்கும் இணைய தளங்கள், நூல்களை விற்பனை செய்யும் இணைய தளங்களை இதற்கு சான்றாக சொல்லலாம்.


விளம்பரம் ஊடான வகை ( ADVERTISING SALES MODEL) விளம்பரங்கள் மூலம் வருவாய் ஈட்டும் இணைய தளங்கள் இவை. இணைய தளத்திற்கு அதிக அளவு பார்வையாளர்களை ஈர்ப்பதன் மூலம் விளம்பர வருவாய் ஈட்டும் தளங்கள் இவை. நீடித்த விளம்பர வருவாய் பெறத் தொடங்கிய பின்னர் பொருட்களை விற்பனை செய்யும் தளமாகவும் மாற்றலாம்.

---

# வாய்ப்புகள் கதவைத் தட்டும்போது



- வாய்ப்புக்கள் மற்றவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கே கூட நாம் யார் என்று காட்டி உணரவைக்கிறது.
  -ராச் போக்கால்ட்
- வாய்ப்புக்கள் கதவைத் தட்டும்போது தயாராக இருப்பதுதான் வெற்றியின் ரகசியம்.
  - டிஸ்ரேலி
- மகத்தான வாய்ப்புக்கள் எல்லோருக்குமே வருகின்றன. ஆனால் அவற்றைச் சாதாரண மனிதர்களால் கண்டு கொள்ளமுடிவதில்லை.
  - ஏ.இ.டன்னிங்
- சரியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பதென்பது நேரத்தைச் சேமிப்பதற்கு ஒப்பாகும். தவறான காலத்தில் செயல்படுவதென்பது கையால் காற்றை அடிப்பதற்குச் சமமானதாகும்.
  -பேகன்
- வெற்றியை நிச்சயம் தப்ப விடுவதற்கு ஒரே வழி, வாய்ப்புகளைத் தப்ப விடுவதாகும்.
  - சார்லஸ்
- அந்தக் கணத்தில் உடனடியாகச் செயல்படுவது தான் விவேகமுள்ளவன் செய்யும் செயலாகும்.
  -லேவடர்



# நம்பிக்கை மின்னல்கள்

ஒருவருக்கு அதிகமான கடவுள் நம்பிக்கை. அருகிலுள்ள அணை உடைந்ததாக செய்தி வந்தது. உடனிருந்தவர்கள் எல்லாம் ஊரைக் காலி செய்தார்கள். "கடவுள் என்னைக் காப்பாற்றுவார்" என்று சொல்லிப் பிரார்த்திக்கத் தொடங்கிவிட்டார். ஒரு படகு வந்தது. அதிலிருந்தோர் அழைத்தனர். "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். பிறகு ஒரு மோட்டார் படகு வந்தது. அவர்களும் அழைத்தனர். "கடவுள் காப்பாற்றுவார்" என்றார். மூழ்கிச் செத்தார். வானுலகம் சென்றதும் கடவுளைக் கேட்டார். "என்னை ஏன் காப்பாற்றவில்லை?". கடவுள் சொன்னார், "இரண்டு படகுகள் அனுப்பினேனே, ஏன் ஏறிக் கொள்ளவில்லை?" வாய்ப்புக்கள் வழிதான் வருவார் கடவுள்.

தற்காப்புக் கலையில் சிறந்து விளங்கும் நிபுணர் ஒருவரிடம் ஓர் இளைஞர் வந்தார். "ஐயா! உங்களிடம் நான் தற்காப்புக் கலையைப் பயில விரும்புகின்றேன். கூடவே இன்னொரு கலையையும் பயில விரும்புகிறேன். அதற்கேற்ப பயிற்சி நேரத்தை நிர்ணயித்துக் கொடுங்கள்" என்றார். உடனே நிபுணர் ஒரு தாளில் எழுதி நீட்டினார். அதில், ஒரே நேரத்தில் இரண்டு முயல்களைத் துரத்தும் வேடன் எந்த முயலையும் பிடிக்கப்போவதில்லை" என்று எழுதியிருந்தது. ஒரே நேரத்தில் ஒரே இலட்சியத்தில் கவனம் செலுத்துவதே நல்லது.

புரூஸ்லியும் அவரது நண்பரும் எட்டு நிமிடங்களில் மூன்று மைல் தூரம் ஓடுவார்கள். ஒருநாள் பூரூஸ்லீ சொன்னார், "இன்று ஐந்து நிமிடங்களில் மூன்று மைல் ஓடு வோம்" என்று ஓடத்தொடங்கி சிறிது நேரத்தில் "முடியவில்லை! மாரடைத்து செத்துவிடுவேன்!" என்றார் நண்பர். "செத்துவிடு" என்றார் புரூஸ்லீ. ஆவேசம் கொண்ட நண்பர் ஓட்டத்தைத் தொடர்ந்தார். அவரால் முடிந்தது. ஒரு குளியலுக்குப் பிறகு பூரூஸ்லீ சொன்னார். "நாம் செயல்களுக்கு நாமே எல்லைகளை வகுக்கக்கூடாது. நம் எல்லைகளை நாம்தான் உடைக்க வேண்டும். தன் எல்லைகளைத் தானே கடப்பவன்தான் மனிதன்

அம்மோஸ் குக்கீஸ்" நிறுவனத்தை உருவாக்கிய வேலி அமோஸ் 100 மில்லியன் டாலர் அளவுக்கு விற்று வரவு செய்த வெற்றிகரமான தொழிலதிபர். சில வீழ்ச்சிகள் காரணமாகத் தன் தொழிலை இழந்தார். தான் உருவாக்கிய "அம்மோஸ் குக்கீஸ்" மீதான உரிமையையும் இழந்தார். ஒரு மில்லியன் டாலர் கடன்தான் எஞ்சியது. மீண் டும் முயன்றார். மீண்டும் தோல்விகள். "பெயரில்லாத மனிதன்" என்ற புத்தகம் எழுதி பெரும் வரவேற்பைப் பெற்றார். "அங்கிள் - நோ நேம்" என்ற பெயரில் புதிய நிறுவனம் துவக்கி, இழந்தவற்றையெல்லாம் வென்றார்.

தான் மீண்டு வரக் காரணம் என்று அவர் சொன்னது, "நசிந்து போன வேளையில் என் நகைச்சுவை உணர்வையும், நம்பிக்கையையும் தக்கவைத்துக் கொண்டேன். முயற்சியைப் பலமடங்கு பெருக்கினேன். மீண்டும் எழுந்தேன்"

தையல் எந்திரத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று எலியாஸ் எண்ணினார். அந்தச் சிந்தனையிலேயே இருந்தவர், ஒருநாள் இரவு உறக்கத்தில் ஒரு கனவு கண்டார். தன்னைச் சில ஆதிவாசிகள் கடத்திச்சென்று 24 மணி நேரத்தில் தையல் எந்திரத்தைக் கண்டு பிடிக்காவிட்டால் கொன்றுவிடுவதாக மிரட்டுகிறார்கள். அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவரைக் கொல்ல ஈட்டிகளை எறிகிறார்கள். அந்த ஈட்டிகளின் முனைகளுக்கு அருகே ஒரு துளை இருப்பதைக் கவனித்தார். கனவு கலைந்தது. ஊசியின் முனையில் துளை ஏற்படுத்தி தையல் எந்திரத்தை உருவாக்கினார். உங்கள் கனவை உள்மனம் நனவாக்கும் என்பது உண்மைதானே!


---

உங்கள் அலுவலகத்தில் பணிபுரிகின்றவர்களில் யாராவது அளவுக்கதிகமாக தேவை இல்லாமல் அலுவலகமே கதி என்று கிடக்கி றார்களா? இவர்களைக் குறித்து நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இவர்களைக் கண்டு பிடித்து விட்டால் தகுந்த பயிற்சி வாயிலாக அவர்களை திறன்மிக்க பணியா ளர்களாக மாற்ற முயற்சிக்க வேண்டும்.

இது நிறுவன வளர்ச்சிக்கு உதவுகிற போக்காயிற்றே? நல்லதுதானே? என்று நினைத்தால் அந்த நினைப்பை மாற்றிக் கொள்ளுங்கள். உள்ள படி இது சாதகமான அம்சமே இல்லை மாறான விளைவைத்தான் ஏற்படுத்தும்.

# இவர்களைப் பார்த்து மயங்கி விடாதீர்கள்



திறமையாகப் பணிபுரிபவருக்கும் இத்தகைய ஆட்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு மெலிதானது. முன்னவர், திட்டமிட்டு வேலையை முடிக்கும் வகை. ஏதாவது ஒரு காலகட்டத்தில் ஒரு பணியை குறித்த நேரத்தில் முடிக்க வேண்டிய தருணம். விற்பனைக் கூடம் அல்லது வங்கியென்றால் நிதி ஆண்டு முடிகிற சமயம், உற்பத்தி நிறுவனமெனில் புதிய நுகர்பொருளைச் சந்தைப்படுத்தும் விழாக் காலம், - திறமையான பணியாள் மிகக் கூடுதலாக வேலை செய்ய வேண்டிய அவசி யம் ஏற்படக் கூடும்.

ஆனால் 'மற்றவர்' ஏதாவது, பதவி உயர்வை எதிர்பார்த்து அதற்காகவே இதுபோல் அதிக வேலை செய்வது போல் காட்டிக் கொள்வார். இந்த முயற்சி வெற்றி தராவிடில், இடிந்தே போவார்.

இத்தகையவர்கள் வேண்டுமென்றே, வேலையை இழுத்தடித்து, விடுமுறை நாளிலும் நிறைய பணி செய்கிறாற் போல் பாவனை செய்வார்கள். இவர்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

இல்லத்தில் குடும்பச் சிக்கலை சமாளிக்க முடியாமல், அல்லது நேரில் எதிர்கொள்ளத் துணிச்சலின்றி, "அலுவலக வேலை" என்று வந்து விடுகின்றவர்களும் இந்தவகையில் அடங்குவார்கள்.

வேலை, இல்லச் சூழ்நிலை இரண்டிலும் ஒரு சமநிலை வேண்டும் அத்தகைய மனப்படுமம் உள்ளவர்கள்தான் நிறுவனத்துக்குப் பலம் சேர்ப்பவர்களாவன.

- வாதூலன் -



தத்துவ முத்து

தொலைதூரத்தில் மங்கலாகத் தெரிகிறதே அதைப் பார்த்துக் கொண்டிருப்பதல்ல நமது வேலை. இதோ கையில் தெளிவாக அளிக்கப்பட்டிருக்கிறதே அதைச் செய்வதுதான் நமது வேலை.

- கார்லைலஸ்

PUBLIC LIBRARY
JAFFNA






# உலகினை அச்சுறுத்தும் எதிர்வு கூறல்கள்

# தீர்க்க தரிசி நாஸ்டர்டாமஸ்

நள்ளிரவு. அந்த மயானத்தில் நிலவு வெளிச்சம் தவிர வேறு வெளிச்சமில்லை. ஆந்தையின் கூக்குரல், தவளைகளின் கொர்ர்ர் சப்தம் தவிர நிசப்தம்.

அந்த இருவரும் தன்னந்தனியே அந்தக் கல்லறையைத் தோண்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் திருடர்கள். கல்லறையில் பிணத்துடன் சேர்த்துப் புதைக்கப்பட்டிருக்கும் தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களைத் திருடுவது அவர்கள் வழக்கம். ஆனால் அவர்கள் யாருடைய கல்லறையைத் தோண்டுகிறார்கள், அதனால் அவர்களுக்கு என்ன ஆபத்து நிகழப்போகிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அந்தக் கல்லறைக்குள்ளிருந்த சவப்பெட்டியை அவர்கள் திறந்ததுதான் தாமதம். எங்கிருந்தோ வந்த துப்பாக்கித் தோட்டாக்கள் அவர்களில் ஒருவன் மேல் பாய்கின்றன. அவன் கீழே சரியும் போது அந்தப் பிணத்தின் மீது, அவர்கள் அந்தக் கல்லறையைத் தோண்டிய வருடம் சரியாக எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறான்.

அது நாஸ்டர்டாமஸின் கல்லறை. 'மிக்கேல் டி நாஸ்ட்ர டாமே! சுருக்கமாக நாஸ்டர்டாமஸ். உலகெங்கும் மிகப் பிரபலமான நபரின் பெயர் இது. 'நாஸ்ட்ராமஸின் தீர்க்க தரிசனங்கள்' என்ற அவரது நூலின் முதல் பாகம் 1555 இலும் இரண்டாம் பாகம் 1568 இலும் வெளியாயின. அன்றிலிருந்து இன்று வரை சுமார் நானூறு வருடங்களாக, பைபிளுக்கு அடுத்த படியாக, தொடர்ந்து அச்சாகிக்கொண்டிருக்கும் சிறப்பைப் பெற்ற புத்தகம் இது.

அப்புத்தகத்தில் அப்படி என்னதான் இருக்கிறது? இந்த நானூறு வருடங்களாக உலகின் பல முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி, அவை எப்போது, எப்படி நடக்கப்போகின்றன என்று சரியாகக் கணித்து எழுதியிருக்கிறார் நாஸ்ட்ரடாமஸ். இலண்டன் நகரம் தீப்பிடித்து எரிந்தது, இரண்டாம் உலகப் போர், விமானம் கண்டுபிடிக்கப்பட்டது, கென்னடி கொல்லப்பட்டது போன்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை மிகச் சரியாக, சில சமயங்களில் தேதிவாரியாகக் கணித்து எழுதியிருக்கிறார். மூன்றாம் உலகப்போர் மூளுமா, இந்தியா உலக நாடுகளுக்குத் தலைமை தாங்குமா போன்ற எதிர்காலத்தைப் பற்றிய கேள்விகளுக்கும் நாஸ்டர்டாமஸ் விடையளிக்கிறார்.

ஆனால் விஷயங்களை நேரடியாகக் கூறிவிடாமல் சங்கேத வார்த்தைகளுடன் (ஹிட்லரை ஹிஸ்டர் என்றது) உருவங்கள் மூலமாக (நெப்போலியனைக் கழுகு என்றது) மறைமுகமாக இவர்தன் பாடல்களை எழுதியிருப்பதால், பலர் பல விதத்தில் புரிந்து கொள்ள வழி செய்கிறது. ஒவ்வொரு வருடமும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நடக்கும்போது, 'அட, இதை நாஸ்டர்டாமஸ் ஏற்கனவே சொல்லி இருக்கிறாரே' என்று தோன்றுவது வழக்கம். சுமார் முப்பது புத்தகங்களாவது, ஒவ்வொரு வருடமும் புதிய விளக்கங்கள், பொழிப்புரைகள் என்ற வகையில் உலகெங்கிலும் எழுதப்பட்டு வருகின்றன.

நாஸ்டர்டாமஸ் பழைய காலண்டரின்படி 1503 ஆம் வருடம் டிசம்பர் மாதம் பதினான்காம் தேதி பகல் வேளை செயின்ட் ரெமி டி மாகாணத்தில் பிறந்தார். அவரது குடும்பத்தினர் மன்னரது அரசவையில் மருத்துவராக வேலை செய்தனர் என்று ஒரு சிலர் கூறுகின்றனர். சிலர் அவர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் என்கின்றனர். அவரது தாத்தா பியர் டி நாஸ்ட்ராமே ஒரு பிரபலமான தானிய வியாபாரி. அவரது பாட்டி பிளாஞ்ச் என்ற உயர்குடிப் பெண். அவர்களது மகன், அதாவது நாஸ்ட்ரடாமஸின் தந்தை, ஜாகுஸ் என்ற ழாமே 1495 இல் செயின்ட் ரெமி டி மாகாணத்திற்குக் குடி பெயர்ந்ததும் பரம்பரைத் தொழிலைக்கைவிட்டார். அவர் ரெயினியர்டி செயின்ட் ரெமி என்ற பெண்ணை மணந்தார். நாஸ்டர்டாமஸின் அம்மாவின் தாத்தா ஒரு மாஜி டாக்டர், வரி வசூலிப்பவராக வேலை செய்தார்.

நாஸ்டர்டாமஸிற்கு ஒன்பது வயதிருக்கும் போது அவரது குடும்பத்தினர் யூத மதத்திலிருந்து மாறிக்கத்தோலிக்கர்களானார்கள். சிறுவயதில் யூதராய் இருந்ததனால் சூட்சுமமான யூத இலக்கியங்களின் தாக்கம் அவரது பாடல்களில் இருந்தது.

குடும்பத்தில் நாஸ்டர் டாமஸ்தான் மூத்த மகன். அவருக்குப் பிறகு பிறந்த மூவரைப்பற்றி சரியான தகவல்கள் இல்லை. கடைக்குட்டியான ழான் நாஸ்டர்டாமஸைப் போலவே பாடல்கள் எழுதுவது, பொழிப்புரைகள் எழுதுவது என்று பெயர் பெற்றவர். மாகாண பார்லிமெண்டில் வேலை செய்தார்.

நாஸ்டர்டாமஸின் இளம் வயதிலேயே அவரது புத்திசாலித்தனம் பளிச்சிட்டது. அவருக்கு படிப்பு சொல்லிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அவரது தாத்தாவான ழானிடம் விடப்பட்டது. அவர் நாஸ்டர்டாமஸிற்கு லத்தீன், கிரேக்க, ஹீப்ரு மொழிகளையும், கணிதம் மற்றும் ஜோதிடக் கலை என்ற வானவியல் சாஸ்திரத்தையும் கற்பித்தார். இந்தத் தாத்தா இறந்ததும் ரூடி பாரிலிருந்த இன்னொரு தாத்தாவிடம் கற்க ஆரம்பித்தார். சிறிது காலம் கழித்து ஆவிங்னான் என்ற புறநகர்ப் பகுதியில் உறவினர் ஒருவர் வீட்டில் தங்கி நாஸ்டர்டாமஸ் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

அக்காலத்தில் வெகுவாகப் பரவியிருந்த பிளேக் நோயின் கொடுமைகள் அவரது மனத்தைப் பாதித்திருந்தன.

1554ல் ழான் அய்ம்ஸ்டி சேவிங்னி என்ற பியூடீனேவின் முன்னாள் மேயர் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாஸ்டர்டாமஸிடம் வந்து ஜோதிடக் கலையையும் வானவியல் சாஸ்திரத்தையும் கற்கும் மாணவரானார். நாஸ்டர்டாமஸ் இறந்த பிறகு அவர் நாஸ்டர்டாமசைப் பற்றி பல நூல்களை எழுதினார். 'நாஸ்டர்டாமஸின் தீர்க்க தரிசனங்கள்' என்ற நூலைத் தயாரிப்பதிலும் வெளியிடுவதிலும் உதவினர்.

1555இல் 'நாஸ்டர்டாமஸின் தீர்க்க தசிரனங்கள்' நூலின் முதல் பாகம் முற்றுப்பெற்றது. இதில் உலகின் இறுதிவரை என்னென்ன நிகழ்ச்சிகள் நிகழும் என்று கணித்து எழுதப்பட்டிருந்தது. நாஸ்டர்டாமஸ் தன் நூலைப் பத்து செஞ்சுரிகளாகப் பிரித்திருந்தார். செஞ்சுரி என்றால் நூற்றாண்டு என்று பொருள். ஆனால் செஞ்சுரி என்று நாஸ்டர்டாமஸ் நூறு ஆண்டுகளைக் குறிக்கவில்லை, நூறு பாடல்களைக் குறித்திருக்கிறார் என்கிறார்கள். ஏழாவது செஞ்சுரியில் மட்டும் நாற்பத்தியிரண்டு பாடல்களே இருக்க, மொத்தம் 942 பாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாடலும் நாலடியார் போன்று நான்கு வரிகளைக் கொண்டது. பதினோறாவது, பன்னிரண்டாவது செஞ்சுரியை எழுத நாஸ்டர்டாமஸ் திட்டமிட்டிருந்தார் என்று தெரிகிறது. ஆனால் அவற்றை எழுதுவதற்கு முன் அவர் இறந்து போனார்.

அவரது பாடல்கள் மறைபொருளாக எளிதில் புரியாத வண்ணம் எழுதப்பட்டிருந்தன. அந்தக் காலத்தில் மந்திர தந்திர வேலைகளில் ஈடுபடுவோரைத் தண்டிக்கும் சட்டம் இருந்ததால், தன்னை ஒரு மந்திரவாதி என்று தண்டித்து விடாமல் தடுப்பதற்காக வேண்டுமென்றே, நேரம் தேதி போன்ற கால விவரங்களை மாற்றி மாற்றி எழுதியதாக தன் கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கிறார். யாருக்குப் புரிய வேண்டுமோ அவர்களுக்குப் புரிந்தால் போதும், எல்லோருக்கும் புரிந்து விடக்கூடாது என்பது நாஸ்டர்டாமஸின் குறிக்கோள்.

அவரது பாடல்கள் ஃபிரஞ்ச், வட்டார, இத்தாலிய, கிரேக்க மற்றும் லத்தீன் வார்த்தைகளைக் கலந்து எழுதப் பட்டிருந்தன. 1555ல் முதல் பாகம் வெளியான குறுகிய காலத்தில் அதிசயப்படத்தக்க வகையில் அந்நூலின் புகழ் ஃபிரான்சிலிருந்து ஐரோப்பா முழவதும் பரவியது. முதல் பாகத்தில் மூன்று செஞ்சுரிகளும் நான்காவதின் பாதி மட்டுமே இருந்தது. பெரும்பாலான மக்கள் படிப்பறிவில்லாமல் இருந்த காரணத்தினால் புத்தகங்கள் பெரும்பாலும் பணக்காரர்களிடம் மட்டுமே காணப்பட்டன.

**இளம்சிங்கம் பெரும் சிங்கத்தை வெல்லும்**
**யுத்தகளத்தில் தனித்தனியாகப் போரிடும்போது,**
**அவன் அவனது கண்களைத் தங்கக் கூண்டில் துளைப்பான்,**
**ஒரே சமயத்தில் இரண்டு காயங்கள், கொடூரமாக இறப்பான்.**

நாஸ்டர்டாமஸின் வாழ்நாளிலேயே நடந்து, புரிந்து கொள்ளப்பட்டு, பிரபலமான பாடல் இது.

நாஸ்டர்டாமசை வருத்திக் கொண்டிருந்த கீல்வாதம் இன்னும் மோசமடைந்துவிடவே, மருத்துவரான அவருக்குத் தன் முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்தார். 1566 ஜூன் மாதம் 17ல் ஓர் உயில் எழுதினார். 3,444 தங்க நாணயங்கள் மற்றும் இதர உடைமைகளைப் பற்றி விரிவாக உயில் எழுதியிருந்தார். ஜூலை மாதம் ஒன்றாம் தேதி பாதிரியாரை அழைத்து, தனக்கு அந்திக் கடன்களைச் செய்யச் சொன்னார். சேவிங்னி அன்றிரவு விடைபெற வந்தபோது 'மறுநாள் தன்னை உயிரோடு பார்க்க மாட்டாய்' என்றார்.

நாஸ்டர்டாமஸின் உடல் செங்குத்தான நிலையில் சலோனிலுள்ள கார்டெலியார்ஸ் சர்ச்சில் புதைக்கப்பட்டார். அவரது மனைவியான ஆன்னே, சலவைக் கல்லாலான ஒரு நினைவுச் சின்னத்தைக் கட்டினார். ஃபிரஞ்சுப் புரட்சியின் போது மூடநம்பிக்கையுள்ள சில ராணுவ வீரர்களால் அவரது கல்லறை திறக்கப்பட்டது. ஆனால் அவரது சடலம் மறுபடியும் சலோனிலுள்ள செயின்ட் லாரென்ட் சர்ச்சில் அடக்கம் செய்யப்பட்டது. இன்றும் அவரது கல்லறையையும் அவரது படத்தையும் அங்கே காணலாம். நாஸ்டர்டாமஸ் தன் கல்லறையைப் பற்றியும், அது திறக்கப்படும் என்றும், அப்படித் திறப்பவன் கொல்லப்படுவான் என்றும் தன் பாடல்கள் இரண்டில் குறிப்பிட்டிருக்கிறார். அவை:

**தெய்விகக் குரல் தெய்வத்தால் நிறுத்தப்படும்**
**அதற்குமேல் அவனால் செல்ல முடியாது**
**வெளிப்படுவதில் ரகசியம் புதைந்து கிடக்கிறது**
**மக்கள் அதன்மீது அதைத்தாண்டி நடப்பார்கள்**

'ஒருவன் மேல் ஒருவன் நடக்கலாம்' என்றால் ஃபிரஞ்சில் சுவற்றில் புதைக்கப்படுவது என்று பொருள். ஒருவன் தாக்கப்படுவான். அவனால் உண்மையை வெளியே சொல்ல முடியாது.

**கல்லறையைக் கண்டறிந்ததும் ஒருவன் திறப்பான்**
**மற்றவன் வரமாட்டான், உடனடியாக மூடிவிடுவான்.**
**பொல்லாதது அவனை வந்து சேரும்**
**யாராலும் அதை நிரூபிக்க முடியாது.**
**அவன் பிரிட்டனாகவோ நார்மன்**
**அரசனகவோ இருப்பது நல்லது**


1813 நாஸ்ட்ர்டாமஸின் கல்லறை குடியரசின் வீரர்கள் இருவரால் திறக்கப்படுவதும், ஒருவன் கொல்லப்படுவதும் இப்பாடல் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ●

வர்த்தகப் பெருமக்களே உங்கள் தொழில் வளம் பெற விளம்பரம் செய்யவேண்டுமா.

உடன் 021 221 9212,
0778697410 ற்கு ஹலோ சொல்லுங்கள்.

உங்கள் தேவைகளை நிறைவு செய்கின்றோம்.

**அச்சு இயந்திர இயக்குநர் தேவை**




யாழ் நகரில் இயங்கும் பிரபல்யமான அச்சகம் ஒன்றிற்கு Hamada(ஹமாடா)அச்சு இயந்திரத்தில் பணியாற்றக் கூடிய திறமையும் அனுபவமும் மிக்க அச்சு இயந்திர இயக்குநர் தேவை.

**கணனி பக்க வடிவமைப்பாளர் தேவை**

Phptoshop,coreldraw,Pagemaker ஆகியவற்றில் முன்னனுபவம் உள்ளவர்கள் மட்டும்.

திறமைக்கும் அனுபவத் தகமைக்கும் ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தகுதியுடையோர் உடனடியாக தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 0777145399


படியுங்கள் “ சிட்டு ” குதூகலமான குழந்தைகள் சஞ்சிகை.



## கழுதை தங்கும் அறை

இரண்டு பயணிகள் அந்தஹோட்டலுக்குள் நுழைந்தனர். அவர்கள் தங்குவதற்கு அழுக்கடைந்த அறையைக் காட்டினார் முதலாளி.

“இது அறையா? கழுதை தான் தங்கும் போலிருக்குது. இதற்கு என்ன வாடகை?” என்று கேட்டான் ஒருவன்

“ஒரு கழுதையானால் இருபது ரூபாய். இரண்டு கழுதையானால் முப்பது ரூபாய்” என்று பதில் சொன்னார் அவர்.

## இன்று போய் நாளை வா

பிச்சைக்காரன்: அம்மா! தாயே! ரெண்டு நாளா பட்டினியம்மா. இந்த ஏழைக்கு ஏதாவது சாப்பிடப் போடுங்கம்மா. புண்ணியமா இருக்கும்.

வீட்டுக்காரி: நேற்று சமைத்த சாதம் குழம்புன்னா பரவாயில்லையா?

பிச்சைக்காரன் : எதுவாக இருந்தாலும் போடுங்கம்மா.

வீட்டுக்காரி : அப்படியானா நாளைக்கு வா.

## பார்க்காத டாக்டர்

மனோதத்துவ டாக்டர் ஒருவரிடம் ஒரு சிறுவனை அழைத்து வந்திருந்தார்கள். டாக்டர் அவனைச் சோதித்தார்.

“நாய்க்கு எத்தனை காதுகள்? என்று கேட்டார்.

“இரண்டு” என்றான் சிறுவன்

“எத்தனை கண்கள்?”

“இரண்டு”

“சரி நாய்க்கு எத்தனை கால்கள்?”

“டாக்டர், நீங்க நாயைப் பார்த்ததே இல்லையா ?” என்றான் சிறுவன்.

## பாதுகாக்கும் முறை

ஆசிரியர்: நாம் சக்தியைப் பாதுகாக்க முடியும் என்பது எல்லோருக்கும் தெரியும். நீ! சக்தியைப் பாதுகாக்கும் ஏதேனும் ஒரு வழியைச் சொல்.

மாணவன்: நாள் முழுவதும் படுக்கையிலேயே படுத்திருப்பது சேர்.


## பள்ளிக்கூடம் மோசம்

அம்மா: இன்னைக்குப் பள்ளிக்கூடம் எப்படி நடந்தது?

மகன் : மோசமம்மா.

அம்மா: ஆசிரியர்கள் ஒரு மாதம் வேலைநிறுத்தத்தின் பிறகு இன்றுதானே பள்ளிக்கூடம் திறந்தார்கள்.


மகன்: ஆமாம்மா. அதனால்தான் பள்ளிக்கூடம் மோசமா இருக்கு.





மருத்துவம்

# தேன் பற்றி தேனான தகவல்கள்






பொதுவாக மனித உடலுக்குத் தேவைப்படும் எல்லா வகைப் பொருட்களும் தேனில் பொதிந்துள்ளது என்பது தேனுக்குள்ள பண்பு.

தேன் அதிக அளவுக்கு சர்க்கரையைக் கொண்டிருக்கிறது. அதாவது குளுக்கோஸ் அல்லது ஃப்ரக்டோஸ் என்ற சர்க்கரை சேர்மங்கள் தேனில் உள்ளன.

ஆனால், இந்த சர்க்கரைப் பண்டங்கள் உடலில் எளிதாக ஈர்த்துக் கொள்ளப்படக்கூடியவை.

அதாவது தேனீன் மூலம் கிடைக்கப் பெறும் சர்க்கரை குடலிலிருந்து நேராக இரத்தத்தை அடைந்து விடுகிறது.

ஆகவே, தேனின் சர்க்கரையினால் உடல் நலத்துக்குப் பெரிய பாதிப்பு ஏதும் ஏற்படுவதில்லை.

நீரிழிவு நோயாளிகள் சர்க்கரையை, சர்க்கரையாலான பண்டங்களைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது எனத் தடைவிதிக்கும் மருத்துவர்கள் கூட அவசியம் கருதி தேனை நீரிழிவு நோயாளிகள் ஓர் அளவோடு பயன்படுத்திக் கொள்வதை அனுமதிக்கிறார்கள்.

தேனில் தூய குளுக்கோசும், ஃப்ரக்டோசும் அடங்கியிருப்பதால் பல விளையாட்டு வீரர்கள் தங்கள் விளையாட்டுகளுக்கு இடையில், இழக்கும் சக்தியைத் துரிதமாகப் பெறுவதற்கு தேனை அருந்துகினன்றனர்.

குழந்தைகளின் வேகமாக வளர்ச்சிக்காக, முதியவர்களின் முதுமைக்காலத்தளர்ச்சியினை நீக்கவும் மருத்துவர்கள் தேனையும் ஒரு மருந்தாக எழுதித்தருகின்றனர்.

தேனில், உயிரணுக்களுக்கும், திசுக்களுக்கும் தேவையான செரிமானப் பொருட்களும் (Enzyme) மற்றும் உடல் நலத்திற்கு தேவையான பொருட்களும் உள்ளன.

தாது உப்புக்கள் மனித உடல் நலத்துக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுவனவாகும்.

தாது உப்புக்களை பொதுவாக உணவின் மூலந்தான் நாம் பெறுகிறோம். பலவித உணவு வகைகளின் மூலம் பெறப்படும் பல தாது உப்புக்களைத் தேனைப் பயன்படுத்துவதன் மூலம் மிக எளிதாகவும் தாராளமாகவும் பெற முடிகின்றது.

குறிப்பாக கால்சியம், சோடியம், பொட்டாசியம், மக்னீஷியம், இரும்பு, குளோரின், பாஸ்பரஸ்கந்தகம், அயோடின் ஆகிய தாது உப்புக்கள் தேனில் தாராளமான அளவு உள்ளன.

தேனில் சில அமினோஅமிலங்களும் உள்ளன. சிறப்பாக மாலிக், சிட்ரிக், டார்ட்டாரிக் ஆக்சாலிக் தாராளமான அளவு உள்ளன.

ஒவ்வொரு மனிதருக்கும் உடல் சீராக - சரியாக ஆரோக்கிய வழி செயற்படுவதற்கு ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர் உழைப்பிற்கேற்ப கலோரி (Calorie) எனப்படும் உணவுச்சூட்டு அளவு அமைந்திருக்க வேண்டியது அவசியம்.

உணவின் மூலந்தான் தேவையான கலோரியை நாம் பெறுகிறோம்.

மற்ற எந்த உணவுப் பண்டமும் தராத அளவுக்கு மிக அதிகமாக தேன் அதிகள அளவு கலோரியை அளிக்கிறது.

சரியான உடல் வளர்ச்சியும், நோயணுகா நிலையும் அமைவதற்கு போதுமான விட்டமின் சத்துக்களை நாம் உணவின்மூலம் பெற்றாக வேண்டியிருக்கிறது.

தேவையான அளவுக்கு விட்டமின் சத்துக்களைப் பெறாத மனிதன் உடல் வளர்ச்சியும் மூளைவளர்ச்சியும் குன்றிய நிரந்தர நோயாளியாக இருப்பான்.

தனியாக தேனை முறைப்படி உட்கொள்வதன் மூலம் உடலுக்கு அவசியமான பல விட்டமின் சத்துக்களை எளிதாகப் பெறமுடிகிறது.

சிறப்பாக தேனிலே B1,B2,B3,B4,B5,B6, C,E,K கரோட்டின் ஆகிய விட்ட மின்கள் போதிய அளவு அமைந்துள்ளன.

சான்றாக ஒரு கி.கிராம் தேனில் வைட்டமின் B2 (ரியோஃப்பிளேவின்) 1.5 மில்லி கிராம் வரை; வைட்டமின் B1, 0-1 மில்லிகிராம் வரை; வைட்டமின் B5 pp (நிகாடினிக் அமிலம்) ஒரு மில்லி B6-5 மில்லி கிராம் வரை; வைட்டமின் C ஏறத்தாழ 30 முதல் 54 மில்லி கிராம் வரை அமைந்திருக்கின்றன.

இங்கே குறிக்கப்பட்ட அளவுகள் குறைவானவையாக இருந்தபோதிலும் இந்த வைட்டமின்கள் தேனில் மற்ற பொருட்களுடன் கலந்து அதாவது கார்போ-ஹைட்ரேட்டுகள் தாது உப்புகள் நுண்தனிமங்கள், அங்கக அமிலங்கள், செரிமான அமிலம் (Enzymes) ஆகியவற்றுடன் கலந்து மிகவும் உயர்ந்த முக்கியத்துவம் உடையனவாகின்றன.

உடல்நலத்துக்கு நேர் எதிரிகளாக உள்ள பாக்டீரியா கிருமிகளின் வளர்ச்சியைத் தேன் தடுத்து விடுகிறது என்ற உண்மை அண்மைக்கால மருத்துவ ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

பல சரும நோய்களை தேனைத் தடவுவுதன் மூலமே குணப்படுத்திவிட முடிகிறது என மருத்துவ மேதைகள் கூறுகிறார்கள். தீயினால் சுடப்பட்ட காயங்களுக்குத் தேனைத் தடவுவது சிறந்த முதலுதவியாகும்.



பூஞ்சக்காளான் எதிர்ப்புசக்தி தேனுக்கு நிறைய உண்டு என்ற உண்மை அண்மையில் கண்டறியப்பட்டிருக்கிறது.

நம்மைச் சுற்றிலுமுள்ள காற்றில் அதிக அளவில் பூஞ்சக்காளான் கருவணுக்கள் நிறைந்துள்ளன. வாய்ப்புள்ள சூழ்நிலையில் அதாவது வெப்பமும் ஈரமும் சரியான அளவில் அமையும் போது உணவுகளில் இந்தக் கருவணுக்கள் முளைவிடத் தொடங்குகின்றன.

வளரும் ஒட்டுயிர் காளான்கள் சில மில்லி மீட்டர் அளவு உணவில் ஊடுருவுகின்றன.

இதன் விளைவாக மாவுகள், சர்க்கரை பழப்பாகு மற்றும் பலவகையான பக்குவம் செய்யப்பட்ட பொருட்கள் மெருகிடப்படாத இனிப்புகள், பழங்கள், பானங்கள் ஆகியவை கெட்டுவிடுகின்றன.

அந்தப் பண்டங்கள் ஒருவித விரும்பத்தகாத மணத்தைப் பெற்று தோற்றத்திலும் மாறுபட்டு விடுகின்றன.

அச்சு இயந்திரம் விற்பனைக்கு

HAMADA
ஹமடா
அச்சு இயந்திரம்

24”பேப்பர் வெட்டும் இயந்திரம்
தொடர்புகளுக்கு : 0777145399

இப்பத்திரிகை 817,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள துவாரகா வெளியீட்டகத்தினரால் யாழ்ப்பாணம் நோபிள் பிறிண்ரேர்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.